# பெருந்தொகையான ஆயுதங்களுடன் 2000 மக்கள் தொண்டர்படை இங்கிருந்து தலைமறைவு

பருவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

விலை ரூபா 3-00

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 சித்திரை 10 றம்ழான் பிறை: 26 இதழ்: 70
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 23-04-1990

(கொழும்பு)
இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட பெருந்தொகையான ஆயுதங்களுடன் சுமார் 2000 மக்கள் தொண்டர்படையினர் வடக்கு- கிழக்கு மாகாணத்தை விட்டு, பாதுகாப்பான இடம்தேடி மறைந்து விட்டதாக இலங்கை பாதுகாப்பு உயர் அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

அண்மைக்காலத்தில் இவர்கள் தமது உயிருக்கும் ஆயுதங்களுக்கும் பாதுகாப்புத் தேடி, படிப்படியாக தென்னிந்தியாவுக்கே சென்றிருக்க வேண்டும் எனவும் பாதுகாப்பு அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்.

இத்தொண்டர் படையினர் பெரும்பாலும் ஈ.பி ஆர்.எல்.

(8-ம் பக்கம் பார்க்க)

இன்று—

## தேனிசை செல்லப்பாவின் இசை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)
யாழ். முற்றவெளி மைதானத்தில் இன்று தேனிசை செல்லப்பாவின் இசைநிகழ்ச்சி நடைபெறும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா), திரு. யோகரட்ணம் யோகி, திரு காசி ஆனந்தன், திரு. ராஜன் ஆகியோர் இந்த நிகழ்ச்சியின்போது உரை நிகழ்த்துவர்

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி யாழ். மாவட்ட அர

(8ம் பக்கம் பார்க்க)

★ இந்த வருடம்

# 30 ஆயிரம் மாணவர்களுக்கு உயர் கல்வி பெறும் வாய்ப்பு!

## நீதி, உயர்கல்வி அமைச்சர் ஹமீத் தகவல்

(கொழும்பு)

**உயர்கல்வி நிலையங்களில் முன்னெருபோதும் இல்லாதவாறு 30 ஆயிரம் மாணவர்கள் இந்த ஆண்டு சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். நாட்டின் உயர்கல்வி வரலாற்றுத் துறையில் இந்த வருடம் முக்கியமான ஒன்ருக விளங்கவிருக்கிறது.**

நீதி மற்றும் உயர்கல்வி அமைச்சர் ஜனுப் ஏ. சி. எஸ். ஹமீத் மேற்படி தகவல்களை உயர்கல்வி அமைச்சில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் அறிவித்தார்.

இந்த மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

1987ம் கல்வி ஆண்டு முதல் 1989ம் கல்வி ஆண்டு வரைப் பட்ட காலப்பகுதியில் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்ற சுமார் 12 ஆயிரம் மாணவர்கள் அடுத்த மாதம் பல்கலைக்கழகங்களில் சேர்த்துக் கொள்ளப்படவிருக்கிருர்கள்.

நடப்புக் கல்விஆண்டில் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகைமை பெற்றமேலும் ஆறுயிரம் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(8ம் பக்கம் பார்க்க)

## தமிழீழ மண்ணின் விடுதலையை முதன்மைபடுத்தி மண்ணின் மைந்தர்களாகவேண்டும் - ராஜன்

(யாழ்ப்பாணம்)
"எமது தமிழீழ மண்ணின் விடுதலையை முதன்மைப் படுத்தி மண்ணின் மைந்தர்களாக வாழவேண்டும். அத்துடன் எமது தேசிய இன விடுதலைப்போராட்டத்தின் தன்மையை சரியாக விளக்கி வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து உதவிப் பணங்களைப் பெறவேண்டும்."

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ். மாவட்ட அமைப்பாளர் திரு. இ. ராஜன் நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெற்ற யாழ். மாவட்ட சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

திரு. ச. ஞானப்பிரகாசம் தலைமையில் இக் கூட்டம்

(8ம் பக்கம் பார்க்க)

மினி பஸ் சேவை—

## இன்றும் நாளையும் இரவு 10-30 மணிவரை நடைபெறும்

(யாழ்ப்பாணம்)
இன்றும், நாளை செவ்வாய்க் கிழமையும் சகல மினி பஸ்களும் இரவு 10-30 மணிவரை சேவையில் ஈடுபடுத்தப்படும்.

தேனிசை செல்லப்பாவின் இசை நிழகச்சியைக் கண்டு, ரசிப்பதற்காகக் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வரவிருக்கும் பெருந்திரளான பொதுமக்களின் போக்குவரத்து வசதிகளைக் கருத்திற்கொண்டே, மினிபஸ் சேவை இரவு 10–30 மணிவரை நீடிக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளையில், தேனிசை செல்லப்பாவின் இசை நிகழ்ச்சி முடிவுற்றதும், பொதுமக்கள் அனைவரும் சௌகரியமாகப் பிரயாணம் செய்யக்கூடிய வகையில் ஒழுங்குகள் மேற்

(8ம் பக்கம் பார்க்க)

## கடந்த மாதம் 140 லட்சம் ரூபாவுக்கு ஆயுள் காப்புறுதி செய்யப்பட்டது

(உடுவில்)
ஆயுள் காப்புறுதி செய்வதில் மக்களுக்கு அதிக ஆர்வம் ஏற்பட்டுள்ளது. கடந்த மாதம் மட்டும் ஆயுள் காப்புறுதி 140 லட்சம் ரூபாவுக்குச் செய்யப்பட்டுள்ளது. 400 பேர் இவ்வாறுன காப்புறுதி செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் காப்புறுதிக் கூட்டுத்தாபன உதவிப் பொது முகாமையாளர் திருமதி ஆர், எவ். அரியநாயகம் இதனைத் தெரிவித்தார்.

பங்குனி மாதம் வரை, வாகனங்களுக்கான காப்புறுதியை 2,952 பேர் செய்துள்ளனர். வாகனம் தவிர்ந்த பொதுக் காப்புறுதிகளான தீ, களவு போன்றவற்றுக்கு 30 பேர் காப்புறுதி செய்துள்ளனர்.

கடல் அபாயக் காப்புறுதிக்குக் கூடுதலான காப்புறுதி செய்யப்பட்டுள்ளது. காப்புறுதியை அடிப்படையாகக் யாகக் கொண்டு பல்வேறு

(8ம் பக்கம் பார்க்க)

## தொண்டர் ஆசிரியர்களை நியமிக்க கல்விச்சேவைகள் ஆணைக்குழு நடவடிக்கை

(கொழும்பு)
அரசாங்க பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களை நியமிப்பதற்கு கல்விச் சேவைகள் ஆணைக்குழு விரைவில் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

இது தொடர்பாக ஏற்கனவே 25,000க்கும் அதிகமான தொண்டர் ஆசிரியர்கள் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக இக்குழு தெரிவித்துள்ளது.

தகைமையுடையவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிருர்கள். அடுத்தமாத இறுதிக்குள் நேர்முகப்பரீட்சைகள் நடாத்தப்படுமென்று சிரேஷ்ட பொதுச்செயலாளர் திரு எஸ். எஸ். பிரேமரட்ண தெரிவித்துள்ளார்.

மாவட்ட ரீதியில் நேர்முகப் பரீட்சைகள் நடைபெறுமென்றும் அறிவிக்கபபட்டுள்ளது.

(அ)

## வடபகுதி ரயில்களில் குளிரூட்டப்பட்ட பெட்டிகள்

(கொழும்பு)
வடபகுதி ரயில்களில் விரைவில் குளிரூட்டப்பட்ட பெட்டிகள் இணைக்கப்படவுள்ளன.

இதற்கென ஜெர்மனியிலிருந்து ஏழு பெட்டிகள் ஏற்கனவே இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக ரயில்வேப் பகுதியைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் 'ஈழநாடு'வுக்கு தெரிவித்தார்.

(8ம் பக்கம் பார்க்க)

யாழ். மத்தியகல்லூரி மைதானத்தில்

## மேதினக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் மேதினக் கூட்டம் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி பிற்பகல் 4- 30 மணியளவில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் யாழ் மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினுல் நடாத்தப்படவிருக்கிறது.

இக் கூட்டத்திற்கு பல்வேறு ஸ்தாபனங்களின் சார்பில் தொழிலாளர்களை மையமாகக்கொண்டு அமைக்கப்பட்ட ஊர்திகள் பங்குபற்றவிருக்கின்றன.

தென்மராட்சிப் பகுதியில் இருந்து வரும் ஊர்திகள் கைதடிச் சந்தியில் இருந்து யாழ்

(8-ம் பக்கம் பார்க்க)

## மலேசியா சிங்கப்பூர் சீன ஏடுகளில் பிரபாகரனுக்கு முக்கியத்துவம்


(கோலாலம்பூர்)
விடுதலைப் புலிகள் தலைவர் திரு வே பிரபாகரன், சீனர்கள் மத்தியில் பெரும் வீரனுக கணிக்கப்படுகின்ருர்.

இந்த விபரத்தை குரும்பசிட்டி திரு. இரா. கனகரத்தினம் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூர், மலேசியாவில் தமிழர் ஆய்வு சுற்றுப்பிரயாணத்தை இப்பொழுது மேற்கொண்டுவரும் உலகத்தமிழர் பண்பாட்டு இயக்க நிறுவனரான திரு. இரா. கனகரத்

(8ம் பக்கம் பார்க்க)

# தேனிசை செல்லப்பா இன்று இசைமழை பொழிகிறார்


(யாழ்ப்பாணம்)

"நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்......... நாட்டின் அடிமை விலங்கு தெறிக்கும்......... போரில் வெற்றி முரசம் முழங்கும் புலிகள் கழுத்தில் மாலை துலங்கும். போன்ற எழுச்சிப் பாடல்களை பாடிய தேனிசை செல்லப்பாவின் இசை நிகழ்ச்சி யாழ். முற்றவெளி மைதானத்தில் இன்று மாலை 5மணிக்கு நடைபெறும். நீண்டநாட்களாக ஆள் அரவம் இல்லாத பகுதியில் தேனிசை செல்லப்பாவின் இசையின் நாதத்தை நேரில் அனுபவிக்கும் முதல் சந்தர்ப்பம் தமிழீழமக்களுக்கு கிடைக்கப்போகின்றது,

தமிழக பாடகி சுவர்ணலதாவும் பங்குபற்றுகிறார். இவர் தமிழகத்தில் பிரபல்யம் பெற்ற பாடகியாவார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைவர் கோ. மகேந்திரராசா (மாத்தயா) முதன்முதலாக யாழ்ப்பாணத்தில் இந்நிகழ்ச்சியில் உரையாற்றுவார்.

விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. டொமினிக் தலைமையில் நடைபெறும் இசை நிகழ்ச்சியை யாழ். மாவட்ட இராணுவ தளபதிதிரு. பானுஆரம்பித்து வைக்க, செயலாளர் யோகி, ராஜன், மகளிர் முன்னணி கலை கலாசார பிரிவு யாழ். மாவட்ட பொறுப்பாளர் செல்வி வசந்தி, திரு. கவிஞர் காசி ஆனந்தன் ஆகியோர் பங்குபற்றுகின்றனர்.

விடுதலைப் புலிகளின் கலை கலாசாரப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை கலைஞர்களை அறிமுகம் செய்து வைக்கிறார்.

விழாவில் பங்குபற்றும் மக்களுக்கு வசதியாக போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (152)


## பார்வையற்றோர், பார்வை குறைந்தோருக்கான கல்வி

★ மேற்படி கல்வி வசதி நவீல்ட் பாடசாலை கைதடியில் உள்ளது

★ கல்வி, விடுதி வசதி, உணவு யாவும் இலவசம்.

★ சிறு பிள்ளைகளைப் பாரமரிப்பதற்கு விஷேட உதவியாளர் உண்டு.

★ 5 வயதிற்குட்பட்ட பிள்ளைகளுக்கு வீட்டிலேயே பயிற்சி அளிக்கும் திட்டம் உண்டு

★ பல்கலைக்கழக படிப்பு வரை வசதி செய்து கொடுக்கப்படும்.

நேரில் அல்லது கடித மூலம் தொடர்பு கொள்க:

அதிபர்,
நவீல்ட் பாடசாலை,
விழிப்புலனிழந்தோர் கல்வி நிலையம்
கைதடி.

(சி-705)



## அறிவித்தல்
### திக்கம் வடிசாலை

மேற்படி நிறுவனத்தில் பின்வரும் பதவி வெற்றிடங்கள் உண்டு. இவற்றுக்கான நேர்முகப்பரீட்சை மூலமான தேர்வு 05-05-1990 சனிக்கிழமை காலை 10 மணிக்கு மேற்படி நிறுவனததின் பணிமனையில் நடைபெறும்.

| | | |
|---|---|---|
| கொதிகலன் இயக்குனர் | — | 01 |
| வடிகலன் இயக்குநர் | — | 01 |
| காவலாளி / பாதுகாப்பு உத்தியோகத்தர் | — | 02 |
| வேலையாளர் | — | 02 |

விண்ணப்பதாரிகள் 18 — 55 வயதுக்குட்பட்டவராய் இருத்தல் வேண்டும். வடிசாலைக்கு அண்மையில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பரீட்சைக்குத் தோற்றுபவர் பதவிக்குரிய விண்ணப்பம், பிறப்புச் சாட்சிப் பத்திரம், கல்வி/தொழில் நுட்ப தகைமை சான்றிதழ், நற்சாட்சிப்பத்திரம் ஆகியனவற்றின் மூலப் பிரதிகளைக் கொண்டுவருதல் வேண்டும்.

சம்பளம் தெரிவுசெய்யப்பட்டவர்களுடன் நேரில் பேசி முடிவு செய்யப்படும். நியமனம் முற்றிலும் சமயோசிதமானது. தெரிவு செய்யப்பட்டவர்கள் உடனடியாக சேவையில் அமர்த்தப்படவுள்ளனர்.

திக்கம் வடிசாலை, தலைவர்
அல்வாய். 22-4-90. (சி 3782)


## "வரலாற்றுத் தியாகி"

(யாழ்ப்பாணம்)

"வரலாற்றுத் தியாகி அன்னை பூபதியின் அறப்போர், தமிழன் வரலாற்றில் பதித்து, ஞாபகப்படுத்த வேண்டிய ஒன்றாகும். ஈழத் தமிழர் சுயநிர்ணய சுதந்திர உணர்வை மேம்படுத்த அன்னை பூபதி புரிந்த தியாகம் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்தது."

புளியங்கூடல் சந்தியில் நடந்த அன்னை பூபதி நினைவஞ்சலிக் கூட்டத்தில் புளியங்கூடல் கிராம அபிவிருத்திச் சபைத் தலைவர் ந. நாகராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் "திருவள்ளுவர், யேசுநாதர். காந்தி வழியில் வந்த அன்னை பூபதி உலக அரங்கிலே உயிர் நீத்த முதற் பெண் என்ற பெருமையும் கொண்டுள்ளார்." என்றார். (152)

## பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

வீதி ஒழுங்கு முறைகளைக் கண்காணித்துக்கொள்பவர்களுக்கு யாழ். மாநகரசபை அலுவலகத்தில் பயிற்சி வகுப்பொன்று நடத்தப்பட்டது.

இப்பயிற்சி வகுப்பை தேசிய துணைப்புப் படை அதிகாரி திரு. திருநாவுக்கரசு, திரு. ஜெயரட்ணம் ஆகியோர் நடாத்தினர். (152)

## மன நோயாளி திடீர் மரணம்

(காங்கேசன்துறை)

மன நோய் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பெண் ஒருவர் திடீரென மயக்கமுற்று மரணத்தைத் தழுவினார்.

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த செல்வராசா ஜெயமலர் (34வயது) என்பவரே மரணமான நபராகும்.

இவரது மரணம் குறித்து திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா விசாரணை நடத்தினார். இருதய நோயால் மாரடைப்பு ஏற்பட்டு மரணம் சம்பவித்ததாக வைத்திய அறிக்கையிலிருந்து தெரியவந்தது. விசாரணை முடிவில் இயற்கை மரணம் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. (86)

## இரண்டாம் தவணைமுதல் இருநேரப் பாடசாலை

(காங்கேசன்துறை)

யாழ். மாவட்டத்தில் மே மாதம் 2ம் திகதி பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்படும் போது அவை இரு நேரப் பாடசாலைகளாக இயங்க உள்ளன.

யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளை இரு நேரப் பாடசாலைகளாக இயங்கச் செய்ய முதலாம் தவணையின் இறுதிப் பகுதியில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட போதும் பின்னர் அவ்வாறு செயற்படவில்லை.

தற்போது விடுமுறை விடப்பட்டுள்ளதால் இந்த விடுமுறை முடிந்து மே மாதம் 2ம் திகதி இரண்டாம் தவணைக்காக பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்படும்போது மேற்படி திட்டம் நிச்சயமாக அமுல் செய்யப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்த சுற்று நிருபம் யாழ். கல்வித் திணைக்களத்தால் சகல கோட்டக் கல்வி அலுவலக உதவிக்கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

மருதனமடம் கோட்ட உதவி கல்விப் பணிப்பாளர் திரு. இ. க. குலசேகரனுக்கு இந்த சுற்று நிருபம் கிடைத்ததையடுத்து அவர் தமது கோட்டக் கல்விப் பிரிவில் உள்ள கொத்தணி அதிபர்களை அழைத்து விளக்கம் அளித்துள்ளார்.

ஆண்டு ஒன்று முதல் ஆண்டு ஐந்து வரையுள்ள பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய சகல பாடசாலைகளும் மே மாதம் 2ம் திகதி முதல் இரு நேரப் பாடசாலைகளாக இயங்க வேண்டுமென அவர் அறிவித்துள்ளார். (86)

## கோரிக்கை

(மட்டுவில்)

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலயத்திற்கு பிரதி திங்கள் தோறும் ஒரு விசேட பஸ் சேவையை நடத்தும்படி சரசாலை இந்து இளைஞர் மன்றம் கோரியுள்ளது. (82)


## இன்று புதுக்கடைத் திறப்பு விழா



23-4-1990 திங்கட்கிழமை

நண்பகல் 12-00 தொடக்கம் 1-30 மணி வரையுள்ள சுபவேளையில்

ஹோட்டல் ஐலன்ட்

உணவகம் திறந்து வைக்கப்படும்

அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் இதனை அறியத்தருகிறோம்.

176, கஸ்தூரியார் வீதி,
(ராஜா தியேட்டர் முன்பாக)
யாழ்ப்பாணம்.

ஹோட்டல் ஐலன்ட் ஸ்தாபனத்தார்.

(சி 3781)


## 4ம் ஆண்டு நினைவஞ்சலி



நெஞ்சுள்ளவரை நினைவில் குடியிருக்கும்
**அமரர் வீ. இரா. சு. மகாதேவன் (வாசு)**
(தொண்டமானாறு)

அன்னையின்மடியில்: 23-04-1952
மகாதேவன் அடியில்: 07-05-1986
திதி: 23-04-90.

மாண்புசேர் அண்ணல் மகிமை சேர்
மகாதேவன் (வாசு) இவன் மாட்சிசால் பெரியோன்
ஆயினும் காலன் அன்றெளித் திவனைக்
குண்டு வடிவில் மண்டியே வந்து
கொழும்பு மத்திய தந்தியகந் தன்னில்
கவர்ந்து சென்றிட்டனன் இவன் இறைதான்
இணைந்திடப் போற்றிடல் எங்கடனாகும்.

உன் நினைவால் உருகும்:
வீ. இரா. சுந்தரமூர்த்தி
குடும்பத்தினர்.

210(76), ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

(சி 3780)

# விடுதலைப் புலிகளின் உண்மை நிலைப்பாட்டை இந்தியா தவறுகக் கணித்துவிட்டது! இலங்கை மக்களின் நன்மதிப்பையும் இழந்துவிட்டது!!

## பிரபல இந்தியப் பத்திரிகையாளர் கருத்து

(புதுடில்லி)

"இலங்கையில் தமிழீழம் அமைவதை இந்தியா ஒருபோதும் விரும்பியதில்லை. ஆயினும், வடக்கு கிழக்கு மாகாணத்தை உள்ளடக்கிய ஒரு 'மினி ஈழம்' அமைப்பு உருவாக்கப்படுவது தற்போதைய ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவினைப் பொறுத்தே அமையும். இதற்கு மாறான விதத்தில் திரு. பிரேமதாசா விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் மாறுபட்டால், தனி ஈழம் அமையக்கூடிய சூழ்நிலை உருவானாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை."

இந்தியாவின் பிரபல பத்திரிகையாளர் திரு. இன்டர் மல்ஹோத்ரா 'சண்டே' எனும் ஆங்கில வார ஏட்டில் எழுதியுள்ள கட்டுரையில் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

இலங்கை இனப்பிரச்சனையில் முன்னைய இந்திய அரசும், 'ரோ' உளவு ஸ்தாபனமும் கடைப்பிடித்த கொள்கைகளையும், விடுதலைப் புலிகளின் பலம், அதனது இராணுவ, அரசியல் இலட்சியங்கள் பற்றி இந்திய அரசின் தவறான கணிப்புகள் குறித்தும் திரு. மல்ஹோத்ரா கடுமையாக விமர்கித்துள்ளார்.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும், அவரது அரசியல் ஆலோசர்களும், தக்க ஆலோசனையின்றி அவசரப்பட்ட நிலையிலேயே இலங்கை இனப்பிரச்சனையில் தலையிட்டதுடன், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உண்மையான நிலைப்பாட்டைத் தவறான முறையில் கணித்து, செயற்பட்ட காரணத்தினாலேயே, சிறந்த முறையில் ஒழுங்கமைக்கப்பட்ட விடுதலைப்புலிகளினதும், தமிழ் மக்களினதும், ஏன் இலங்கை மக்கள் அனைவரினதும் 'அனுதாபத்தையும், நன்மதிப்பையும் இந்தியா இழக்கவேண்டி ஏற்பட்டது'' என்றும் அவர் கருத்து தெரிவித்துள்ளார்.

## சரணடைவோரின் பாதுகாப்பு நடவடிக்கை

(கொழும்பு)

சரணடைவோரின் பாதுகாப்பையும், காலதாமதமில்லாத விசாரணையையும் செயற்படுத்தும் விதத்தில் நடந்துகொள்வது என்று 'தாமாகவே முன்வந்து சரணடைவோர் சம்பந்தமான குழு' உறுதி பூண்டுள்ளது.

ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவை நேற்று முன்தினம் சந்தித்த இக்குழு, கடந்தசில ஆண்டுகாலமாகவே வன்செயல்களில் ஈடுபட்டுவந்த இளைஞர்களைச் தேசிய நீரோட்டத்தில் சேர்த்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளை தாம் துரிதப்படுத்தவிருப்பதாக தெரிவித்துள்ளனர்.

பலகட்சிகளைச் சேர்ந்தவர்களாக தாம் இக்குழுவில் இடம் பெற்றாலும் மனச்சாட்சிக்குகந்த விதத்தில் இளைஞர்களுடன் நடந்துகொவ்வோம் என்றும் உறுதியளித்துள்ளனர். (அ)

## முகாமைத்துவ பயிற்சி நெறி: முதலாவது குழு நாளை திரும்புகிறது

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்ட நிறுவனமும், பனை அபிவிருத்திச் சபையும் இணைந்து நடத்தும் மகளிர் குழுக்களின்முகாமைத்துவப் பயிற்சி நெறியில் உள்நாட்டுப் பயிற்சியை முடித்து ஒருமாதகாலம் இந்தியாவிற்குப் பயிற்சிபெறச் சென்ற முதலாவது குழுவினர் நாளை 24ம் திகதி நாடு திரும்புகின்றனர்.

இப்பயிற்சியை முடித்த இருபத்தைந்து பயிற்சியாளர்களுக்கும் இம்மாதம் 25-ம் திகதி பெருந்தோட்டத் தொழில்துறை அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரத்தினா சான்றிதழ்களை வழங்கவிருக்கின்றார்.

இச்சான்றிதழ் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினால் வழங்கப்படவிருக்கிறது.

இப்பயிற்சி நெறிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள இரண்டாவது குழுவினர் அடுத்தமாத நடுப்பகுதியில் இந்தியா செல்லவிருக்கின்றனர். (123)

## இந்திய — பாகிஸ்தான் எல்லையில் ஊரடங்கை மீறிய 6 பேர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலி!

### சிர்குலைவு நடவடிக்கையில் ஈடுபட்ட 4 பேர் கைது

(புதுடில்லி)

ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தின் இந்திய-பாகிஸ்தான் எல்லையில் ஊடரங்கு உத்தரவை மீறியவர்கள்மீது பொலிசார் சுட்டதில் ஆறு பேர் கொல்லப்பட்டனர். ஐந்து பேர் காயமுற்றனர். ஆறுபேர் கைது செய்யப்பட்டனர்.

பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீர் பகுதியிலிருந்து இந்தியாவுக்குள் நுழைய முற்பட்ட 19 பேரை மறைந்திருந்த இந்திய பாதுகாப்புப் படையினர் சுற்றுவளைத்துப் பிடித்துக் கொண்டனர். சதிநாச வேலைகளுக்குப் பாவிக்கவென அவர்களிடமிருந்த வெடிமருந்துப் பொருள்களும், ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

இதேவேளை, காஷ்மீர் தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த நான்குபேர் பழைய டில்லிப் பகுதியில் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிர்குலைவு நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக இவர்களைப் பாதுகாப்புப் படையினர் தேடி வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (பூ)

## உளவுவேலையில் ஈடுபட்ட அதிகாரி

(பொன்)

கிழக்கு ஜெர்மன் நாட்டுக்காக உளவு வேலைகளில் ஈடுபட்டதாகச் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டவர் முன்னாள் மேற்கு ஜெர்மன் தூதரக உதவித் தலைமையதிகாரி டாக்டர் எச். பாலு என்று அறியப்படுகிறது.

இவர் கொழும்பில் ஜெர்மன் தூதரக பொருளியல்துறை முதற் காரியதரிசியாகப் பணியாற்றியவர் என்றும், நீண்டகால ராஜதந்திர சேவையின் போது களவாகப் பல முக்கிய தகவல்களை கிழக்கு ஜெர்மன் நாட்டுக்கு அனுப்பிவந்ததாகவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## அரசு வழங்கிய ஆயுதங்கள் இம்மாத இறுதிக்குள் மீளப்பெறப்படும்

[கொழும்பு]

சட்டத்துக்கு முரண்பட்ட விதத்தில் ஆயுதங்களை எவரும் வைத்திருக்க அரசாங்கம் அனுமதிக்காது என்று ஏற்கனவே அரசு உத்தரவிட்டிருந்தபோதிலும், பாதுகாப்புக்கென வழங்கப்பட்டிருந்த 6,117 ஆயுதங்களில் ஆக 1,671ஆயுதங்கள்மட்டுமே இதுவரையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அரசியற்கட்சி பிரமுகர்களுக்கு தனிப்பட்ட பாதுகாப்புக்கருதி அரசு ஆயுதங்களை வழங்கியிருந்தது தெரிந்ததே. இவற்றில் ஐ. தே. கட்சி 607 ஆயுதங்களையும், சிறீலங்கா சுதந்திரக்கட்சியினர் 438, எஸ். எல். எம். பி. 153, எஸ். எல். சி. பி. 83, யு. எஸ். ஏ. 9. எம். இ. பி. 50, தனிப்பட்டவர்கள் 331 ஆயுதங்களையும் ஒப்படைத்துள்ளன.

இம்மாத இறுதிக்குள், அரசினால் வழங்கப்பட்ட ஆயுதங்கள் அனைத்தும், சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து பெறப்படும் என்று பாதுகாப்பு அமைச்சு சகல கட்சி செயலாளர்களுக்கும், விஷேட அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

## சமூக அபிவிருத்தி அமைப்பு மூலம் கடற்றொழிலாளருக்கு உதவி

(காங்கேசன்துறை)

''கிராமரீதியில் மக்கள் சமூக ஒற்றுமையைக் கட்டிக்காப்பது அவசியமாகும். பிளவுகள், வேற்றுமைகளை வளர்த்தால் அது எமக்கே ஆபத்தாக முடியும். ஆகவே இப்படியான அமைப்புகளை உருவாக்கி ஒன்றுபட்டவகையில் மக்கள் செயற்படவேண்டும்.''

இவ்வாறு மயிலிட்டி கிராமிய கடற்றொழில், சமூக அபிவிருத்தி அமைப்பின் அங்குரார்ப்பணப் பொதுக் கூட்டம் மயிலிட்டி றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் நடைபெற்றபோது அதில் கலந்து தலைமைதாங்கி உரையாற்றிய விடுதலைப் புலிகள் காங்கேசன்துறைப் பிரதேசப் பொறுப்பாளர் திரு அனயரசன் கூறினார்.

மயிலிட்டிப் பகுதிக் கடற்றொழிலாளர்களின் பல்வேறுபட்ட தேவைகளை நிறைவேற்றவும், நிவாரண உதவிகளை வழங்கவும், கடற்றொழிலை அபிவிருத்திசெய்யவும் மேற்படி அமைப்புமூலம் நடவடிக்கை எடுக்கப்படுமெனக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது

அமைப்பின் நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவாகினர்:- தலைவர்: திரு. செ. தனபாலசிங்கம், உப தலைவர் திரு:

(5-ம் பக்கம் பார்க்க

## இந்திய - பாகிஸ்தான் உறவுகள் சீர்குலைவு

# ஸிம்லா உடன்படிக்கை அடிப்படையில் சமாதானப் பேச்சு நடைபெறவேண்டும்

### சோவியத் அரசியல் விமர்சகர் கருத்து

(மாஸ்கோ)

''ஜம்மு - காஷ்மீரில் உக்கிரமடைந்துவரும்இந்திய-பாகிஸ்தான் நெருக்கடியை சோவியத் யூனியன் கிலேசத்துடன் அவதானித்துவருகிறது'' என்று பிரபல சோவியத் அரசியல் விமர்சகர் திரு. கே. கெவோர்கியான் எழுதியுள்ளார். அவருடைய கருத்துக்கள் அரசாங்க வட்டாரங்களைப் பிரதிபலிப்பதாகக் கருதப்படுகிறது.

திருமதி பெனாஸிர் பூட்டோ பிரதமரானபோது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் சீரடைவதற்கான அறிகுறிகள் தென்பட்டன. பாகிஸ்தான் நூதுவர் புதுடில்லியில் பதவியேற்றபோது பாகிஸ்தானுடன் இந்தியா ஒத்துழைப்பை வளர்த்துக் கொள்ள விரும்புவதாக ஜனாதிபதி வெங்கட்ராமன் அறிவித்தார். இந்திய - பாகிஸ்தான் உறவுகள் 'சார்க்' ஸ்தாபனத்தின் வளர்ச்சியைப் பெரிதும் நிர்ணயிக்கின்றன. 'சார்க்' ஸ்தாபனம் தென்னாசிய நாடுகளின் பிரச்னைகளுக்குக் கூட்டாகப் பரிகாரம்காணவே நிறுவப்பட்டது. இந்திய - பாகிஸ்தான் உறவுகள் சீர்குலையும் போது முழுத் தென்னாசிய பிராந்தியமும் பாதிக்கப்படுகிறது'' என்று திரு. கெவோர்கியான் குறிப்பிடுகிறார்.

ஸிம்லா உடன்படிக்கையின் அடிப்படையில் சமாதானமான அரசியற் பேச்சுவார்த்தைமூலம் பிரச்சனையைத் தீர்த்துக்கொள்ள இரு நாடுகளும் முன்வரவேண்டும் என்பதே சோவியத் யூனியனின் கருத்தாகும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

### மணிவாக்கு

தான் மெய்வருந்துவதே சேவையின் உண்மைக்கு உயர்ந்த அடையாளமாகும்.

—மகாத்மாகாந்தி

## நமது நோக்கு

### மீனவர் வாழ்வு மீண்டும் மலர....!

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு-நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வு!''

''அந்நிய சக்திகளை வெளியேற்றி இலங்கைக் கடற்பகுதியைத் தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பின்பும் கடற்றொழிலாளர்கள் தம் வேற்றுமைகளைக் களைந்து, நாட்டின் பொருளாதாரத்தைககட்டி எழுப்புவதற்குத் தமக்குள் தீர்வு காணாமல் இருப்பது வேதனையைத் தருகிறது''-இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியற்பொறுப்பாளர் திரு. ஸ்ரான்லி டொமினிக் கவலை தெரிவித்துள்ளார்.

வடமராட்சிக் கடற்றொழிலாளர் சங்கக்கூட்டம் அண்மையில் பருத்தித்துறையில் நடந்தது. மீனவர் பிரச்சனைகளைத் தீர்க்க, அவர்கள் வாழ்வு மீண்டும் மலர்ச்சிபெற வழிவகைகள் ஆராயப்பட்டன. பிணக்குகளைத் தீர்த்துப் புதுவழிகாட்ட விடுதலைப் புலிகள் ஆவன செய்து வருகின்றனர்.

இலங்கை இராணுவக் கெடுபிடிகள் வலுத்திருந்த வேளை, கடலுக்குள் செல்லக்கூடாது என்ற தடைகளாலும், ஊரடங்குச் சட்டங்களாலும் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் மீனவர்களே!

அகதிகளானோர்கள் பலர்; வருமானம் இழந்து வறுமையில் வாடினோர்கள் பலர்; வீடிழந்து, சொத்திழந்து தவித்தவர்கள் பலர்.

அமைதிப்படை வந்தும் இவர்கள் அமைதி பெறவில்லை: வேதனை தொடர்ந்தது.

இன்று, சுமுகநிலை தோன்றிய போதும் இவர்களுக்கிடையே பல பிரச்சனைகள் தோன்றியுள்ளன. தகுதியான சிவில் நிர்வாகம் இல்லாததால் தீர்வுகள் தாமதமாகி வந்தன.

பிணக்குகள் விரிசலடைந்து பகைமை உணர்வுகள் வளர்ந்துவிட்டன.

''ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வு'' என்ற பாரதியார் எச்சரிக்கையை நாம் அடிக்கடி மறந்துவிடுகிறோம்.

இந்தப் பிணக்குகளைத் தீர்த்து மீனவர்களின் பொருளாதாரத்தைக் கட்டி வளர்க்க விடுதலைப் புலிகளின் அமைப்பு முன்வந்துள்ளது.

பல்வேறு புள்ளி விபரங்களின் அடிப்படையில் யாப்பு ஒன்று ஆக்கப்பட்டுள்ளது. பொதுச்சபையின் கூட்டத்திலே இந்த யாப்பு விதிகள் விவாதிக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. இது நல்ல முன்மாதிரியாகும்.

மே மாதம் முதல் மீனவர்களின் மலர்ச்சிக்காக புதிய கடற்றொழிலாளர் சங்கம் உதயமாகவுள்ளது.

ஆழ்கடல் மீன் பிடித்தலுக்கு வேண்டிய உதவிகள் பெற்றுத்தரப்படவுள்ளன.

சிறிய குழுக்கள் அமைத்து, வறிய மீனவக்குடும்பங்களுக்குச் சிறியபடகுகளும், மீன்பிடிஉபகரணங்களையும் வழங்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அரசாங்கத்திடமிருந்தும் சர்வதேச நிறுவனங்களிடமிருந்தும் வரும் உதவிகளை மீனவக் குடும்பங்கள் பெற்று வாழ்வை வளமாக்கிடவும் இத்தகைய மீனவச் சங்கங்கள் உதவிட வேண்டும்.

ஏனைய மாவட்டங்களிலும் இத்தகைய சங்கங்கள் அமைக்கப்பட்டு மீனவர் பிரச்சனைகள் தீர்க்கப்பட்டுப் பொருளாதார மறுமலர்ச்சிக்கான ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்; செய்யப்படுமென எதிர்பார்க்கின்றோம்.

''ஒன்று பட்டால் உண்டு வாழ்வு!''- இதனை நாம் மறந்துவிடக் கூடாது.

# வடிவாம்பிகை வடிவமங்காவவாக மாறிய வரலாறு

இலங்கையின் பழம் பெருமை வாய்ந்த சிவஸ்தலங்களுள் முன்னேஸ்வரமும் ஒன்றாகும். இந்த ஸ்தலம் வடமேல் மாகாணத்தில் புத்தளம் மாவட்டத்திலுள்ள சிலாபம் நகருக்கு கிழக்கே ஒருமைல் தூரத்தில் அமைந்துளளது.

இந்த ஸ்தலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சுவாமியின்பெயர் முன்னைநாதர். அம்மனின் பெயர் வடிவாம்பிகை.

முன்னேஸ்வரம் ஆலயத்திலுள்ள ஸ்தூபி தூண்கள் ஆகியவற்றின் தோற்றத்தில் இருந்து இக்கோவில் பல நூற்றூண்டுகளுக்கு முன்பேஅமைக்கப்பட்டதென்று மதிப்பிடப்படுகிறது. குளக்கோட்டு மன்னன் இந்த முன்னேஸ்வர ஆலயத்திற்குஅறுபத்தாறுகிராமங்களை மானியமாக வழங்கினான். அத்துடன் ஆலயத்தில் பல திருப்பணிகளைச் செய்தான். என்பதற்கு ஆதாரங்கள் உண்டு.

அந்த அறுபத்தாறு கிராமங்களில் ஒன்றுதான் வடிவாம்பிகை கிராமம். இங்கு வாழ்ந்த வன்னி தமிழ் மக்கள் காலப்போக்கில் கலப்பு திருமணங்களால் இனம் மாறிப் போய்விட்டார்கள். இன்றும் தங்களை வன்னி ஆட்கள் என்று அழைத்துக்கொள்வதில் பெருமைப்படுகிறார்கள். இந்த வடிவாம்பிகை கிராமம் அன்று புத்தளம் மாவட்டத்திலுள்ள தமிழ் ஏழு கிராமங்கள் என்று அழைக்கபபடும். தெமல ஹத் பத்து வன்னியனார் பிரிவினுள் அடங்கியிருந்தது.

இனக்கலப்பு திருமணங்களால் இனம், மதம், மொழி, கிராமம் ஆகியனவும் மாறிப் போயுள்ளன என்பது நன்கு தெளிவாகத் தெரிகிறது.

இந்த வடிவாம்பிகை கிராமம் காலப்போக்கில் வடிவு மங்கையாக மாறி இன்று ''வடிவமங்காவ'' என்ற சிங்கள பெயருள்ள கிராமமாக அழைக்கப்படுகிறது. அத்துடன் சிங்கள பௌத்த கலாசாரம் நிரம்பிய கிராமமாகவும் திகழ்கின்றது.

இந்த வடிவமங்காவ கிராமம் புத்தளம் மாவட்டத்திலுள்ள ஆனைமடுவ தேர்தல் தொகுதியிலுள்ள ஒரு கிராமமாகும்.

மா. அ. கி. துரைநாயகம்

# கிளிநொச்சி கண்ட எழுச்சி ஊர்வலம்
# புதுமுறிப்பில் அன்னை பூபதி நினைவுவளைவு

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கிளிநொச்சி மேற்கு பிரதேச சிற்றூர் அவைகளின் எழுச்சிப் பெருவிழா கிளிநொச்சி மத்திய கல்லூரி விளையாட்டுத் திடலில் ஆரம்பமாகியது.

எழுச்சிப் பெருவிழாவிலும் பரந்தன் குமரபுரத்திலிருந்து ஆரம்பமான பிரமாண்டமான எழுச்சி ஊர்வலத்திலும் சுமார் முப்பதினாயிரம் மக்கள் கலந்துகொண்டதுடன் ஆயிரக்கணக்கான வாகனங்களும் சைக்கிள் வண்டிகளும் இடம்பெற்றன.

மங்கள இசை முழங்க, கிளிநொச்சி நகர் சிற்றூர் அவைத் தலைவர் திரு. இ. சரவணபவானந்தன் தலைமையில் விழா ஆரம்பமானது. விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கிளிநொச்சி மேற்கு பிரதேசப் பொறுப்பாளர் திரு. ரீ. அத்தார் வரவேற்புரை நிகழ்த்தினார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அமைப்பாளர் திரு. பரமமூர்த்தி பேசுகையில்;

''தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியில் தமிழ் மக்கள் அணிதிரண்டு இலட்சியத்தில் வெற்றிகாண வேண்டும். இன்று பெருந்தொகையாக இங்குதிரண்டுஇருக்கிறீர்கள். இது உங்கள் இலட்சியப் பற்றையும் கொள்கையின் பலமான உறுதியையும் காட்டுகிறது. சாதிபேதம், வர்க்க பேதமற்ற சமத்துவ சமுதாயத்தைக் கட்டிவளர்ப்போம். அன்னை பூபதி கணபதிப்பிள்ளை தமிழ்மக்களின் இலட்சியத்தை உறுதியை நிலைநாட்டிய ஒப்பில்லாத தாய்'' என்றார்

வன்னிப்பிராந்திய அரசியல் பொறுப்பாளர் திரு.சந்திரன், கிளிநொச்சி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. கோபி, கிளிநொச்சி கிழக்கு பிரதேசப் பொறுப்பாளர் திரு. அலெக்ஸாண்டர், கிளிநொச்சி நகர் பொறுப்பாளர் திரு. நிமால் உட்பட பலர் உரையாற்றினார்கள். கிளிநொச்சி கொத்தணி அதிபர் திரு. சோதிநாதன் தலைமையில் பட்டிமன்றமும், கவிஞர் நவபாலகோபால் தலைமையில் 'களை எடுப்போம் வா தமிழா' என்றதலைப்பிலானகவியரங்கமும், நடன, நாட்டிய, நாடக, வில்லிசை, இன்னிசை நிகழ்ச்சிகளும் சிறப்பம்சங்களாகஇடம்பெற்றன. டாக்டர் கே. வி. கே. திருலோகமூர்த்தி நன்றியுரையாற்றினார்.

### புதுமுறிப்பில் நினைவு வளைவு

புதுமுறிப்பு கிராமத்தில் அன்னைபூபதி கணபதிப்பிள்ளை நினைவாக நினைவுவளைவு ஒன்று திறந்துவைக்கப்பட்டது. திரு. ஆர். சோமசுந்தரம் இதனைத் திறந்து வைத்தார். பெருந்தொகையான பொதுமக்கள் இத்திறப்புவிழா வைபவத்தில் கலந்துகொண்டனர். செல்வா நகரில் அன்னை பூபதி நினைவாக கலை விழாவும் உண்ணாவிரதமும் மிகவும் சிறப்பாக நடந்தேறியது. விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மாவட்டப் பொறுப்பாளர் திரு. கோபி, கிராமியப் பொறுப்பாளர் திரு. யமால் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். கலை, கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (83)

## பலதும் பத்தும்

### அந்த நாடகம்!

1953 – சங்கானையைச் சேர்ந்த 'அவர்' சென்னைக் கிறித்தவக் கல்லூரி மாணவர்.

இராமாயணத்தை எதிர்த்து வந்த எம். ஆர். ராதாவின் ''கீமாயணம்'' தமிழகத்தையே ஒரு கலக்குக் கலக்கியது!

சங்கானையில் ஒரு விழா- 'கீமாயணத்தின்' சில கட்டங்களை 'அவர்' நாடகமாக்கி, இராமனாகவே நடிக்கிறார்; அவரின் சொந்தத் தம்பியே இலட்சுமணனாக நடிக்கிறார்.

பழைமையில் ஊறிப்போன பார்வையாளர்கள் இடையே சலசலப்பு; எழுத்து மூலமே எதிர்ப்பு வந்துவிட்டது.

மேடையிலே இராமனிடம் கடிதம் கொடுபடுகின்றது. 'அவருக்கு' விஷயம் புரிந்துவிட்டது. நாடகம் தொடர்ந்தால் கல்லெறியும், குழப்பமும் தடுக்க முடியாதனவாகிவிடும்.

சங்கடத்தைச் சாமாளித்தது எப்படி?

''தம்பி! இலட்சுமணா! பரதன் கடிதம் அனுப்பியுள்ளான்; நாட்டிலே ஏதோ குழப்பமாம்! குழப்பத்தைத் தடுக்க, நாம் உடனடியாக அயோத்திக்குச் செல்வோம்!''- நாடக வசனமாகவே சபையோருக்குச் சொல்லப்பட்டது!

இராமனும், இலட்சுமணனும் 'நைசாக' மேடையை விட்டு நழுவி மேக்கப் கலையாமலே சைக்கிளில் தொத்தி, அயோத்திக்கா...? இல்லவேயில்லை; தமது வீட்டுக்குச் சென்றுவிட்டார்கள். குழப்பம் தவிர்க்கப்பட்டது! விழா ஏனைய நிகழ்ச்சிகள் தொடர்ந்தன. யார் 'அவர்?''

வாணி

# வசந்தபுர மக்களுக்கு விரைவில்குடிநீர் கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறையிலுள்ள வசந்தபுர மக்களுக்கு விரைவில் குடிநீர் கிடைக்கும் என்று யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம் ஈழநாடுவுக்கு தெரிவித்துள்ளார்.

''வசந்தபுர அண்ணா சன சமூக நிலையத்தினர் தங்களது குடிநீர் தட்டுப்பாட்டை நீக்குமாறு கேட்டனர். அவர்களுக்கு சீமெந்து, கல்லு, மணல், இரும்பு போன்ற பொருள்களை மாத்திரம் தருவோம். மிகுதி நீங்களே செய்ய வேண்டும் என்றுசொன்னேம். இதன் பிரகாரம் 500 கலன் கொள்ளக்கூடிய ஒரு நீர்த்தாங்கி அங்கு அமைக்கப்படுகின்றது'' என்று தெரிவித்த ஆணையாளர்;

''இதில் முக்கிய விஷயம், இந்த நீர்த்தாங்கிக்கு பவுசர்கள் மூலம்கொண்டுவரப்பட்ட குடிநீர் நிரப்பப்படும் பின்பு அங்குள்ள மக்களுக்கு விநியோகம் செய்யப்படும். இது ஒரு பரீட்சாத்தமானமுறை. இது வெற்றியளிக்கும் பட்சத்தில் மாநகரசபைககுள் இருக்கும் குடிநீர் தட்டுப்பாடுள்ள பகுதிகளுக்கும் நடைமுறைப்படுத்தப்படும்'' என்றார். (152)

# நோய்த்தடுப்பு நடவடிக்கை

(காங்கேசன்துறை)

வலி. வடக்கில் மா, எலுமிச்சை, தோடை போன்ற மரங்களுக்கு மருந்து தெளித்து அவற்றில் ஏற்படும் நோய்களைத் தடுக்க ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் வல் செயல்கள் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்தமையால் அவர்களது பராமரிப்பிலிருந்த மா, எலுமிச்சை, தோடைபோன்ற மரங்கள் தகுந்த பராமரிப்பு இன்றி நோய்கள் பெருமளவில் தாக்கி அவற்றின் உற்பத்தியும் பாதிப்படையநேரிட்டது.

இதனைக் கருத்திற்கொண்டு இந்த மரங்கள் பூக்கும்தருணத்தில் மருந்து தெளித்து நோய்களை ஒழிப்பதன்மூலம் உற்பத்தியைப் பெருக்க ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

வலி. வடக்கில் மருந்து தெளிக்கும் நடவ க்கைகளைத் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ். விவசாயப் பகுதியினர் மேற்கொள்ளவுள்ளனர்.

தமது மரங்களுக்கு மருந்து தெளிக்க விரும்புவோர் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (86)

# திருத்த வேலை, நீர் வழங்கல்:

## யாழ்ப்பாண மாநகர சபைக்கு ரூ. 30 லட்சம் நிதி

(யாழ்ப்பாணம்)
யாழ். மத்திய சந்தை திருத்தம், வீதிகள் திருத்தம் மற்றும் நீர்வழங்கல் ஆகியவற்றுக்காக யாழ். மாநகர சபைக்குபுனருத்தாபன அமைச்சினுல் 30லட்சம்ரூபா கிடைத்திருக்கின்றது.

இந்நிதியின் பிரதிபரிசிலனை பார்த்து ஏற்கனவே மதிப்பிடப்பட்ட மிகுதிப் பணத்தை புனருத்தாபன அமைச்சுவழங்கும் என்று எதிர்பாக்கப்படுகின்றது. (152)

# ஊழியர்கள்தொகைமதிப்பீடு

## அடுத்தமாதம் மேற்கொள்ளப்படும்

(யாழ்ப்பாணம்)
அரச திணைக்கள, கூட்டுத்தாபனம் சபைகளின் ஊழியர்களின் தொகை மதிப்பீடு மே மாதம் மேற்கொள்ளப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது, தொகை மதிப்புப்புள்ளி விபரத் திணைக்களம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அடுத்த மாதம் நடாத்தப்படவுள்ள இவ்வூழியர் தொகை மதிப்பு இலங்கையில் மேற்கொள்ளப்படும் ஆருவது ஊழியர் தொகை மதிப்பாகும். 1968, 1972, 1977ம் ஆண்டுகளில் இத்தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் உதவியுடன் பொது நிர்வாக அமைச்சினுல் நடாத்தப்பட்டது 1980, 1985 ம் ஆண்டுகளில் தொகை மதிப்புப் புள்ளி விபரத் திணைக்களத்தால் நடாத்தப்பட்டன.

இத்தொகை மதிப்பு அமைச்சுகள், ராஜாங்க அமைச்சுகள், திணைக்களங்கள், மாகாணசபையின் கீழ் வரும் சகல நிறுவனங்கள், உள்ளூராட்சி, நியதிச் சபைகள், கூட்டுத்தாபனங்கள், அரச - பிரத்தியேகக் கம்பனிகள் என்பவற்றிலுள்ள சகல நிரந்தர, தற்காலிக அமைய, ஓய்வு பெற்று மீண்டும் வேலைக்கு அமர்த்தப்பட்ட ஊழியர்களை அடக்கும் என்றும் ஊழியர்கள் கேள்விக்கொத்து ஒன்றைத் தாமாகவே நிரப்புவதின் மூலம் தேவைப்படும் தரவுகளைக் கொடுக்கவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வேலை நிறுத்தம் அல்லது வேறு காரணங்களுக்காக வேலையிலிருந்து நீககப்பட்டோர், அரசாங்க ஒதுக்கீட்டு நிதியிலிருந்து சம்பளம் பெருதோர், ஒப்பந்தக்காரர்களும், அவர்களது வேலையாட்களும், தனியார் பாடசாலைகளைச் சேர்ந்த ஊழியர்கள் ஆகியோர் இத்தொகை மதிப்பில் தவிர்த்துக் கொள்ளப்படுவர் என்று பொது நிர்வாக மாகாண சபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சுச் செயலாளர் அறிவித்துள்ளார்

பூரணப்படுத்தப்பட்ட சகல கேள்விக் கொத்துகளும் மே மாதம் 15ம்திகதிக்குமுன் அனுப்பிவைக்சபடவேண்டுமென்று சகல அரச, கூட்டுத்தாபனங்களுக்கும் பணிக்கப்பட்டுள்ளது. (54)

# உங்கள் பிரச்சனை என்ன?

கேள்வி:- எனது அடையாள அட்டையில் எனது பெயர் தகப்பனுரின் முதலெழுத்தோடு இருக்கின்றது. நான் அண்மையில் திருமணம் செய்துவிட்டேன். எனது கணவரின் முதலெழுத்தோடு வருவதற்கு என்ன நடவடிக்கை எடுககவேண்டும்?

எஸ். காந்திமதி, வரணி.

பதில்:- யாழ்ப்பாண ஆட்பதிவுத் திணைக்களப் பிரிவில் ஆர். பி. டி. 8 என்ற படிவம்எடுத்து பூரணப்படுத்த வேண்டும். தங்களின் அண்மைக்கால மூன்று படங்கள், திருமண அத்தாட்சிப் பத்திரம், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் ஆகியவற்றை கிராம சேவகரிடம் ஒப்படையுங்கள். நாளடைவில் உங்கள் கணவரின் முதல் எழுத்தோடு உங்கள் பெயர் இருக்கத்தக்கதான அடையாள அட்டையை வழங்குவார்கள். (152)

# "யாழ். நகரில் இயங்கும் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கங்கள் இணையவேண்டும்'

## - டாக்டர் பிலிப்

(யாழ்ப்பாணம்)
''யாழ். நகரில் இயங்கிவரும் இரு உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கங்களும், வருங்காலத்தில் ஒன்றுசேர்ந்து இயங்கவேண்டும் என்பதே எனது நீண்ட நாள் ஆசை. இவ்விடயத்தை நான் பல சந்தர்ப்பங்களில் வலியுறுத்திய போதும், இதுவரை எதுவித பலனும் கிடைக்கவில்லை. வருங்காலத்திலாவது இவ்விரு சங்கங்களும் ஒன்றிணைந்து செயல்பட்டால், உதைபந்தாட்டத்தின் வளர்ச்சிக்கு பெரும் உறுதுணையாக இருக்கும்,''

இவ்வாறு யாழ். உதைபந்தாட்ட லீக் தலைவர் டாக்டர் ஜே. பி. ஸி. பிலிப் தெரிவித்தார்.

அண்மையில், இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினுல் அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் தெரிவுப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவர் திரு. ஈ. கே. குமரையா தலைமையில் நடைபெற்றபோது சிறப்பு விருந்தினராக் கலந்துகொண்ட டாக்டர் பிலிப் மேற்கண்டவாறு கூறினுர்.

இவ்வைபவத்துக்கு திரு. ஈ. கனகலிங்கம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு புதிய மத்தியஸ்தர்களுக்கான சான்றிதழ்களையும், விருதுகளையும் வழங்கினுர்.

யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தலைவர் திரு. ஈ. கே. குமரைய்யா இவ்வைபவத்தில் பேசுகையில்; ''வருடா வருடம் நடாத்தப்படும் இப்பரீட்சையில், வடமாகாண பரீட்சார்த்திகளே மிகக்கூடுதலாகச் சித்திபெற்று இலங்கையிலேயே முன்னணி வகித்துவருவதாக அண்மையில் வெளியான இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதையிட்டு நாம் பெருமையடைய வேண்டும். ஆனுல் சான்றிதழ்களைப் பெற்றவுடன் உங்களுடைய கடமை முடிந்துவிட்டதென நினைக்கவேண்டாம். நீங்கள் அனைவரும் உதைபந்தாட்டப்போட்டிகளுக்கு மத்தியஸ்தம் வகிக்க முன்வர வேண்டும். எமது சங்கத்தில் கூடுதலான மத்தியஸ்தர்கள் இருந்தபோதிலும் ஒரு சிலரே உதைபந்தாட்டப் போட்டிகளுக்கு மத்தியஸ்தம் வகித்து வருகிருர்கள். வருங்காலத்தில் இந்த நிலைமை மாறி நீங்கள் அனைவரும் உதைபந்தாட்டப் போட்டிகளுக்கு மத்தியஸ்தம் வகிப்பதற்கு துணிவுடன் முன்வரவேண்டும்'' என்ருர்.

காரியதரிசி திரு. எஸ். அன்ரனிப்பிள்ளை அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். (வி

## சமூக அபிவிருத்தி

(3ம் பக்கத் தொடர்ச்சி)
க. அருணகிரிநாதர், இணைச் செயலாளர்கள்: திரு. செ. தவராசா, திரு. தி. புஷ்பராஜா, இணைப் பொருளாளர்கள்: திரு. கு. பூபாலசிங்கம், திரு. சி. நவரத்தினம்.

21 பேர்கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது. (86)

# விபத்துக்கள்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் ஸ்ரரன்லி வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற லொறி – சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

இவ்விபத்தில் யாழ்ப்பாணம் பிறவுண் வீதியைச் சேர்ந்த சுப்பையா தியாகலிங்கம் (வயது 50) என்பவரே சைக்கிளில் சென்றுகொண்டிருக்கையில் விபத்துக்குள்ளானவர். காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஂ ஂ ஂ

நவாலியில்நேற்றுமுன்தினம் இடம்பெற்ற லொறி விபத்தொன்றில் ஒருவர் படுகாயம் அடைந்தார்.

நவாலியைச் சேர்ந்த எஸ். செல்லத்துரை (வயது 64) என்பவர் படுகாயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஂ ஂ ஂ

கிளிநொச்சி பழைய பஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கார் – சைக்கிள் விபத்தொன்றில் ஒருவர் படுகாயமடைந்தார்.

கிளிநொச்சி அம்பாள் குளத்தைச் சேர்ந்த வி. தர்மலிங்கம் (வயது 53) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

ஂ ஂ ஂ

நெடுந்தீவில் நேற்று முன்தினம்இடம்பெற்ற டிராக்டர்-வண்டி விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

இவ்விபத்தில் எட்டாம் வட்டாரத்தைச் சேர்ந்த லோறன்ஸ் யோகராசா (வயது 24) என்ற இளைஞரே படுகாயமடைந்தவராவார். காயம் அடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (56)

# காணியற்ற வறிய மக்களுக்கு

## 10 லட்சம் ஏக்கர் காணி பகிர்ந்தளிப்பு

(கொழும்பு)
காணியற்ற வறியமக்களுக்கு 10லட்சம் ஏக்கர் காணியை ஒதுக்கீடு செய்வதற்கு அரசாங்கம் விரைவில் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

'காணிப்பயன்பாடு பகிர்ந்தளிப்பு தொடர்பான ஜனுதிபதி உயர்மட்டக்குழு' அடுத்த ஆறுமாத கால எல்லைக்குள் 10 லட்சம் ஏக்கர் காணிகளை மக்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டும் என்று ஜனுதிபதி திரு. ஆர். பிரேமதசா பணித்துள்ளார்.

காணிப்பகிர்ந்தளிப்பு பயன்பாடு சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென ஒரு குழுவை ஜனுதிபதி கடந்த அக்டோபர்மாதத்தில் நியமித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இதுவரையில் சுமார்2லட்சம் ஏக்கர் காணி பகிர்ந்தளிக்கப்பட்டது சாதனைக்குரியது ஆயினும்; அடுத்த ஆறுமாத கால எல்லைக்குள், இக்குழு தனது நோக்கத்தைப் பூரணமாக நிறைவேற்றவேண்டும் என்றும் ஜனுதிபதி பிரேமதாசா சுட்டிக்காட்டியுள்ளார்.

# வரலாற்று சிறப்புப்பெற்ற யமுனுரி சிதைந்து கிடக்கிறது

(யாழ்ப்பாணம்)
வரலாற்று - பண்பாட்டு - தொல்லியல் பாரம்பரியம் கொண்ட நல்லூர் சங்கிலித்தோப்பிலுள்ள யமுனுரி, சிதைவுற்ற நிலையில் காணப்படுகிறது.

யமுனுரியை சுற்றிக்கட்டப்பட்ட பழையகற்கள்உடைந்து போய், ஏரிக்குள் விழுந்து கிடக்கின்றன. அத்துடன் சிதைவுகளும் ஏற்பட்டுவருகின்றன.

நல்லூர் சங்கிலித்தோப்பிலுள்ள யமுனுரிதொல்பொருள் திணைக்களத்தின் தொல்பொருள் பாதுகாப்பிடமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது

சங்கிலித்தோப்பிலுள்ள யமுனுரி 1487ல் சிங்கை கனகசூரியனின் முகற்குமாரன் சிங்கை பரராசசேகரனுல் அமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (153)

## உலக தகவல் சமாதான மாநாடு

(மாஸ்கோ)
ஐந்து நாட்களாக நடைபெற்ற 11-வது உலக தகவல் சமாதான மாநாடுமுடிவடைந்தது. 60 நாடுகளைச் சேர்ந்த 500 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்

மாஸ்கோவில் நடைபெற்ற இம்மாநாட்டில் பேசிய முன்னுள் துருக்கி பிரதமர் பூலெந் எஸேவித்; பெரஸ்ரோய்க்கா; சீர்திருத்தங்களுக்குப் பின்னர் உலக நிலவரம் நல்ல திசையில் செல்கிறது; நாட்டுக்குள்ளே பிரம்மாண்டமான மாற்றங்கள் நிகழ்கின்றன. கிளாஸ்நொஸ்தையும், பெரஸ்த்ரோய்க்காவையும் மக்கள் வரவேற்கின்றனர். துருக்கி சோவியத் உறவுகள் பெரஸ்த்ரோய்க்காவுக்கு முன்னரே சீரடைய ஆரம்பித்தது. சீர்திருத்தத்திற்குப் பின்னர் சோவியத் எரிவாயு துருக்கிக்குக் கிடைக்கிறது. 1986-1989 காலத்தில் வர்த்தகமும் மும்மடங்கு பெருகியுள்ளது'' என்று அவர் கூறினுர்.

## துறைமுக ஊழியர்களுக்கு அஞ்சலி

(காங்கேசன்துறை)
காங்கேசன்துறை துறைமுகப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினுல் படுகொலைசெய்யப்பட்ட துறைமுக ஊழியர்கள் திரு. தயாளசிங்கம், திரு. அப்புத்துரை, திரு. நேசமுத்து ஆகியோரின் மூன்ருண்டு நினைவஞ்சலி வைபவம் துறைமுக அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

87ம் ஆண்டு ஏப்ரல் 21ல் நடந்த தாக்குதலின்போது மேற்படி ஊழியர்கள் படுகொலைசெய்யப்பட்டிருந்தனர்.

இவர்களின் நினைவாகத் துறைமுகப்பகுதி அலுவலகத்தில் உருவப்படங்கள் வைக்கப்பட்டு துறைமுக ஊழியர்கள் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

இதே தினத்தில் படுகொலை செய்யப்பட்ட பாதுகாவல் உத்தியோகத்தர்கள். திருவாளர்கள்; மயில்வாகனம், ராஜன், துரைராஜா ஆகியோருக்கும் அஞ்சலிசெலுத்தப்பட்டது. (86)

## வயோதிபர் பலி

[புங்குடுதீவு]
மீன்வாங்குவதற்காக கடற்கரைக்குச் சென்ற வயோதிபர் ஒருவர் கடலில் மூழ்கி மரணமானுர்.

புங்குடுதீவு எட்டாம் வட்டாரம் மடத்துவெளி என்னும் பகுதியைச்சேர்ந்த எஸ். நடராசா என்பவரே இவ்வாறு மரணமானுர். (101)

# யாழ். குடாநாடு இருளில் மூழ்கும் அபாயம் இல்லை!

## உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளினால் இலங்கை மின்சாரசபைக்கு 129 மில்லியன் ரூபா நிலுவை யாக இருப்பதால் யாழ். குடாநாடு விரைவில் இருளில் மூழ்கலாம் என்று மின்சார சபை அதிகாரி ஒருவர் விடுத்த அறிக்கை நியாயமற்றது என்றும், யாழ். குடாநாடு மின்சாரசேவை பாதிக்கவேண்டிய அவசியம் இல்லையென்றும் யாழ் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். டிவகலால பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார்.

அண்மையில் இலங்கை மின்சாரசபைபிரதிபொதுமுகாமையாளர் திரு. கந்தசாமி இம்மாவட்ட உள்ளூராட்சிச்சபைகளிடமிருந்து இலங்கை மின்சாரசபைக்கு 129 மில்லியன் ரூபா நிலுவையாக இருப்பதால் மின்விநியோகம் துண்டிக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று பத்திரிகைகளில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

1983ம்ஆண்டிலிருந்து 1989ம் ஆண்டுவரை நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையில்சட்டவிரோதமாகவும், மின்மீற்றர்களில் மோசடி செய்தும் திருட்டு மின்சாரம் பெறப்பட்டும் பொதுமக்கள் மின்சாரத்தைப் பெற்றுவந்தனர். இதனாலேயே மின் நிலுவை ஏற்பட்டிருந்தது. யாழ். மாவட்டத்தில் இந்திய அமைதிப்படையினர் மின்சாரத்தை பாவித்ததினால் 10 மில்லியன் ரூபாவுக்கு மேல் கட்டணம் அறவிடப்படாமலிருந்தது இத்தொகையும் இலங்கை மின்சாரசபையின் நிலுவையில் அடங்குகின்றது'' என்றும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: ''எமது சக்திக்கும் அப்பாற்பட்ட ரீதியில் எம்மால் எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ள முடியாத சூழ்நிலையில் நடந்த மின் பாவனைக்கு எம்மால் பொறுப்பேற்க முடியாது நிதி நிலைமை உள்ளது. மின்சார சபைக்கு உடனுக்குடன் அவர்களின் கட்டணம் கோரல் கடிதம் கிடைத்ததும், உள்ளூராட்சிச் சபைகளினால் பணம் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றது.''

''129 மில்லியன் ரூபா நிலுவையையும் திருட்டு மின்சார பாவனையினாலேயே ஏற்பட்டது. இதுசம்பந்தமாக முன்னாள் யாழ். அரச அதிபர் மூலமும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. 17-1-90ம் திகதி இலங்கை மின்சாரசபை உயரதிகாரிகளுடனான கூட்டத்திலும் இவ்விடயம் விரிவாக ஆராயப்பட்டது. இச்சட்டவிரோத மின்பாவனை பற்றி நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தினேன்.''

''புனருத்தாரண, புனரமைப்புப்பணம் ஒதுக்கீடு செய்யும்போது சட்டவிரோத மின் இழப்பினால் அசாதாரண சூழ்நிலையில் ஏற்பட்ட 129 மில்லியன் ரூபா மின் நிலுவைப் பணத்தையும் அரசாங்கம் பதிவழிப்புச் செய்து உள்ளூராட்சிச் சபைகளுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும். அல்லது இதற்கென வெளிநாட்டு உதவி பெறப்படவேண்டும் என்பதே எனது கோரிக்கையாகும்''.

''1983-ம் ஆண்டு அபிவிருத்தி நிதியிலிருந்து மின்சார விநியோகத்தைச் சிரமைப்பதற்கென 12.3 மில்லியன் ரூபா இலங்கை மின்சாரசபைக்கு வழங்கப்பட்டிருந்தது'. ஆனால் இத்தொகையைப் பெற்றிருந்தும் நிலுவையைக் கட்டுமாறு இலங்கை மின்சாரசபை கோருவது நியாயமற்றது.

''சட்டவிரோதமின்பாவனையைத் தடுப்பதில் உள்ளூராட்சிச்சபை ஊழியர்கள் உயிருக்கு ஆபத்தான நிலையிலும் பணியாற்றுகின்றனர். பல இடங்களில் இவ் ஊழியர்கள் தாக்குதலுக்குள்ளாகின்றனர். தற்போது தமிழீழ விடுதலைப்புலிகள் சட்டவிரோதமின்பாவனையைப் தடுப்பதில் எம்முடன் ஒத்துழைப்புத் தருகின்றனர்'' (54)

## 200 கோடி ரூபா நஷ்டம்!

(கொழும்பு)

தென் பகுதியில் அண்மைகாலங்களில் இடம்பெற்ற ஜே. வி. பியினரின் நடவடிக்கைகளால் அரசு, பொதுச் சொத்துகளுக்கு சுமார் 200 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இதில் பொதுச் சொத்துகளுக்கு சுமார் 95 கோடி ரூபாவும், தோட்டத் தொழிற்துறைக்கு சுமார் 80 கோடி ரூபாவும் சேத மேற்பட்டுள்ளது.

மேற்படி நஷ்டங்களை நிவர்த்திக்கும் பொருட்டு வெளிநாடுகளிடம் இலங்கை அரசு உதவி கோரியுள்ளதாகவும் அமைச்ச் தெரிவித்தார். (சி)

# மன்னாரில் எழுச்சி விழா

## திரளான மக்கள் கலந்து கொண்டனர்

(மன்னார்)

தாயகத்தின் மண்ணைக் காத்த அன்னைபூபதிக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும் இந்திய இராணுவத்தின்வெளியேற்றம் குறித்தும் மன்னாரில் மாபெரும் எழுச்சிவிழா மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. இதனை முன்னிட்டு மன்னார் நகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது.

தள்ளாடியிலிருந்து மன்னார் நகரம்வரை ஆங்காங்கே சிகப்புக்கொடிகள் பறந்தன, வாழை மகர தோரணங்கள், பூமாலைகள் எல்லாம் விழாவை அலங்கரித்தன. எழுச்சிவிழா ஊர்வலம் தள்ளாடி சந்தியிலிருந்து மன்னார் நகரம் ஊடாக, விளையாட்டு அரங்கை அடைந்தது. ஆயிரக்கணக்கானமக்கள் அலைமோதிக்கொண்டிருக்க எழுச்சிக்கூட்டம் ஆரம்பமாயிற்று.

வரவேற்புரையை ஆசிரியர் திரு. ஜெரனி வழங்கினார். அவரைத் தொடர்ந்து பொதுமக்கள் சார்பில் பலர் உணர்ச்சி மிகு சிறப்புரைகள் ஆற்றினர் விடுதலைப்புலிகளின் மகளிர் முன்னணியைச் சேர்ந்த, வீர மங்கை ஜூலி, சிற்றூரவை அமைப்பாளர் திரு. பத்தா, ஆகியோர், போராட்டப் பாதையில் பெண்களின் பங்களிப்பை உலகத்துக்கு எடுத்துக்காட்டிய அன்னை பூபதியின் வீரப்பண்பை, சுதந்திரதாகத்துடனும், வீர உணர்ச்சியுடனும், தியாக சிந்தையுடனும் சொல் வடிவில் வடித்தனர்.

சுதந்திர தாகத்தை ஏற்படுத்தும் இவ்வெழுச்சி விழாவில் மக்களுக்கு உணர்வூட்டும். கருத்துமிக்க இன்னிசைகளும் பாடப்பட்டன,

விடுதலைப் புலிகளின் மன்னார் அரசியல் பொறுப்பாளர் திரு. அ. சுரேஷ் பேசுகையில், ''எனது உயிரிலும் மேலான மக்களே, நாம் ஒரு புரட்சியை ஏற்படுத்தினோம். அதில் எழுச்சியைக் கண்டோம். அதில் ஒரு மகிழ்ச்சி, மலர்ச்சி-இன்று அது எழுச்சி விழாவாக உருப்பெற்று நடைபெறுகின்றது. நாம் நின்றுகொண்டிருக்கும் புண்ணிய பூமியை நாமே கட்டிக்காக்க வேண்டும். இது எமது சுயநிர்ணய உரிமைப் போராட்டமாகும். வியட்நாம், கியூபா போன்ற உலக நாடுகளில் நடைபெற்றதுபோல இலங்கையிலும் வீர வரலாறுகள் படைக்கப்படுகின்றன. இதற்குக் காரணம் எமது தலைவரின் தலைமைத்துவமும் தனித்துவமான நேர்மை, நீதியுமாகும். உலக நாடுகள் போற்றக்கூடிய விதத்தில் புலிகள் வாழும் தேசமாக இலங்கை மலரப்போகின்றது. இதற்கு உங்கள் கரங்கள் கைகொடுக்கவேண்டும் என்றார்.

## கடனுதவிபற்றி ஆராயப்பட்டது

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதி உழைக்கும் மகளிர் நிறுவனத்தின் முதலாவது செயற்குழுக்கூட்டம் வேலணை கற்பகம்அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்நிறுவனத்தின் தலைவி திருமதி தி. பத்மாவதிதலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தீவுப்பகுதியில் இயங்கும் உழைக்கும் மகளிர் குழுக்களின் தொழில் வாய்ப்புக்கான பல திட்டங்கள் ஆராயப்பட்டன.

மகளிர் குழுக்களுக்கான கடனுதவி பெறுவது தொடர்பாகவும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது. (132)

## ''நோயாளர் சேவை தெய்வீகமானது''

### பயிற்சி பெற்றோருக்கு அறிவுரை

(மட்டுவில்)

''நோயாளர் சேவை என்பது ஒரு புனிதமான சேவையாகும். நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கடமை செய்பவர்கள், புனிதமானவர்கள். இப்புனிதமான சேவைக்கு நீங்கள் உங்களை இன்றுமுதல் அர்ப்பணித்துவிட்டீர்கள். உங்களுக்கு சாந்தம், கருணை, பொறுமை, சகிப்புத்தன்மை, சேவை மனப்பான்மை என்ற அணிகலன்கள் தேவை. இந்த அணிகலன்களுடன், சேவை என்ற இலட்சியத்துடன் உங்கள் பணிதொடரட்டும்''

இவ்வாறு தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் தமதுசுகாதாரப் பயிற்சிகளை முடித்துக்கொண்டு வெளியேறிய சுகாதாரத் தொண்டர்களுக்கு டாக்டர் தெய்வேந்திரம் அறிவுரை வழங்கினார்.

தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில், கிராமிய சுகாதார உதவியாளர்கள் 65 பேரும், சுகாதார தரிசிப்பாளர்கள் 26 பேரும் மூன்று மாதகாலம் பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறினர். இவர்களுக்கான நியமனக்கடிதங்கள் 12ம் திகதி வழங்கப்பட்டன. தொடர்ந்து ஒரு பிரியாவிடை வைபவமும் இடம்பெற்றது.

பயிற்சிபெற்றவர்கள் திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு, வவுனியா, மன்னார் முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கோப்பாய், மானிப்பாய், சாவகச்சேரி, பருத்தித்துறை, கிளிநொச்சி, தெல்லிப்பளை, ஆகிய இடங்களில் சேவைக்காகச் செல்கிறார்கள்.

சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் வடகிழக்கு சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் எஸ். இரத்தினசபாபதி சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் ப. கனகசபை, தாய் சேய் வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி ஜீ. பொன்னம்பலம் தொற்றுநோய் தடுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் சிவபாதம், மற்றும் சுகாதார வைத்திய அதிகாரிகள் சிறுவர் பாதுகாப்பு நிதிய உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

டாக்டர் தெய்வேந்திரம் தனது அறிவுரையில்; ''நீங்கள் மேற்கொண்டுள்ளது ஒரு மாபெரும் தொண்டு. இது தெய்வீகமான சேவை இச்சேவையின் புனிதத் தன்மையை நீங்கள் நன்குணர்ந்து கொள்ளவேண்டும். அப்படி உணர்ந்துகொள்ளும் பட்சத்தில் நீங்கள் உங்கள் இதயபூர்வமான சேவையைமேற்கொள்வதன் மூலம் உங்கள் பணி சிறக்கும்; வாழ்வும் சிறக்கும்'' என்றார். (82)

## சங்காபிஷேகம்

(உடுவில்)

சங்குவேலி வெட்டுக்கட்டையம்பதி அருள்முகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் 13 வது சங்காபிஷேக மணவாளக் கோல விழா மே மாதம் 11ம் திகதி நடைபெற உள்ளது.

அன்றைய தினம் காலை 10 மணிக்கு சகஸ்ர சங்காபிஷேகம் நடைபெறும். பரிவார மூர்த்திகளுக்கு அஷ்டோத்திர சத சங்காபிஷேகம் நடைபெறும்.

காலை 7 மணிக்கு யாகபூசையும் பகல் 12 மணிக்கு அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படும்.

மாலை 5 மணிக்கு ஸ்ரீவள்ளி தேவசேனா சமேத சுப்ரமண்ய சுவாமிக்கு திருக்கல்யாணம் நடைபெற்று திருவூஞ்சல், விசேட ஆராதனையுடன் ஸ்ரீவாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரரும், ஸ்ரீ வல்லபா சமேத சித்தி விநாயகரும் சேர்ந்து திருவீதி உலா வந்து அருள் பாலிப்பர்.

## அறிவொளி மன்ற அறிவுப் போட்டி

(நாவற்குழி)

நாவற்குழி அறிவொளி மன்றத்தினால் நடாத்தப்படும் இவ்வாண்டிற்கான அறிவியற் போட்டி மே மாதம் 9ம், 10ம் திகதிகளில் நடைபெற இருக்கின்றது. இதற்கான விண்ணப்பங்களை இம்மாதம் 30ம் திகதிக்கிடையில் அனுப்பி வைக்கவேண்டுமென அறிவொளி மன்றத் தலைவர் திரு. பொ. சுப்பையா தெரிவித்தார்.

இப்போட்டிகளில் நாவற்குழி கிழக்கு, நாவற்குழி மேற்கு கிராமசேவையாளர் பிரிவில் வசிப்பவர்களும், நாவற்குழி மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களுமே பங்குபற்றலாமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிகள் ஆரம்ப பிரிவு, கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு என்ற அடிப்படையில் இசை, தமிழ் உறுப்பெழுத்து, ஆங்கில உறுப்பெழுத்து, தமிழ்ப் பேச்சு, ஆங்கிலப்பேச்சு, ஆங்கிலப் பாட்டு, திருக்குறள் மனனப் போட்டி என்று நடைபெற உள்ளன. (107)

## இராசி பலன்

23-04- 1990

திங்கட்கிழமை

மேடம்: பிடிவாதம், வீரம், மறதி, வைத்தியச்செலவுகள், நண்பர்கள் உதவி.

இடபம்: யோசனை, ஆடம்பரம்' சுபச்செய்தி, மாற்றங்கள், உபாதைகள் ஏற்படல்.

மிதுனம்: தூரத்துச் செய்தி, பேச்சுவார்த்தை, மனக்குறைவு, திட்டமிடல், பணவரவு.

கடகம்: சங்கீதஞானம், யோசனை, ஆலயதரிசனம், சகோதரர் சிறப்பு, ஆடம்பரம்.

சிங்கம்: நண்பர்கள் உதவி, கடன் வரவு, அலைச்சல், நன்மதிப்பு, தொழிலிட வரவேற்பு.

கன்னி: உற்சாகம், நன்மதிப்பு, மறதி, வைராக்கியம், கடன் வரவு.

துலாம்: உடல் உபாதை, குடும்பக்கலவரம், மனோதிடம், வைத்தியச் செலவு.

விருச்சிகம்: வீண் யோசனை, தூரத்துச்செய்தி, இடமாற்றம், உபச்சாரம், மறதி.

தனுசு: பொருள் வரவு, பிடிவாதம், சோம்பல், நன்மதிப்பு, இனசன வரவு.

மகரம்: செல்வாக்கு, நின்மதி, நோ, அதிகாரிகளின் உதவி, செலவு.

கும்பம்: தெய்வ வழிபாடு, சிறுபிரையாணம், அற்பர் உதவி, சுபகாரியம்.

மீனம்: செல்வாக்கு, பொய் பேசுதல்' யோசனை, கடன் வரவு, இடாம்பீகம்.

இ. மகாதேவா

# மா கப்பல் காங்கேசன் வந்தது

(காங்கேசன்துறை)

கடந்த 2மாத இடைவெளியின் பின்னர் மா கப்பல் ஒன்று காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் போதியளவு மா கையிருப்பில் இருந்தமையால் கப்பல் மூலமாக மா கொண்டுவரப்படவில்லை. தற்போது மாவின் கையிருப்பு குறைந்ததை அடுத்து மேற்படி கப்பல் மூலம் 1000 தொன் மா தருவிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

'மேர்க் செரண்டிப்' என்னும் இக்கப்பலில் இருந்து மா இறக்கும் வேலைகள் துரிதகதியில் நடைபெறுகின்றன. (86)

# இந்திய ராணுவ நடவடிக்கையின்போது கைதாகிக் காணமல்போனவர்கள்

(வடமராட்சி)

இந்திய இராணுவத்தின் நடவடிக்கைகளின் போது, கைது செய்யப்பட்டு காணமற் போனவர்களின் விபரங்கள் மேற்படி காணமற் போனவர்களின் உறவினர்களால் உத்தியோகபூர்வமாக வல்வைப் பிரஜைகள் குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளன. தெரிவிக்கப்பட்ட தகவல்களும் பெயர் விபரங்களும் வருமாறு:

1. கனகசபை உதயகுமார் (சம்பவகாலம் 18-05-89), பனிப்புலம், பண்டத்தரிப்பு, 2. அந்தோனிப்பிள்ளை றுெபின்சன் குரூஸ் (29-08-89) கொழும்புத்துறை, யாழ்ப்பாணம், 3. சுப்பிரமணியம் கனகரெட்ணம் (7-10-88) அரசடி வீதி, நல்லூர், 4. நவரெத்தினம் தவஜோதி (28-12-88) மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை, 5. சண்முகராசா வரதராஜா (16-11-87) பருத்தித்துறை வீதி, நல்லூர், 6. செபமாலை சின்னத்தம்பி மரியதாஸ் (24-10-87) கோப்பாய்தெற்கு, 7. குமாரசாமி துளசிதாஸன் (22-10-87) 3ம் கட்டை, கல்வியங்காடு, 8. சூசைதாஸன் ஜோன்சன் (22-06-89) இத்தாவில், பளை, 9. பண்டாரி ரெத்தினம் (15-11-87) அரசடி ஒழுங்கை. நல்லூர், 10. வெள்ளையன்ஞானகுமார், (8-11-87) சண்டிலிப்பாய் வடக்கு, 11. மாணிக்கன் கந்தசாமி (8-11-87) சண்டிலிப்பாய் வடக்கு, 12. அப்பாபிள்ளை விக்கினேஸ்வரன் (8-11-87) சண்டிலிப்பாய் வடக்கு, 13. துரையப்பா ஜெயராசசிங்கம் (31-12-87) ஏழாலை மேற்கு, 14. சுப்பிரமணியம் தவேந்திரன் (21-12-87) ஏழாலை மேற்கு, 15. வீரவாகு சற்குணராசா (கற்கண்டு) (30-12-87) ஏழாலை மேற்கு, 16. வேலாயுதம் மதிவாணன் (28-05-89) ஏழாலை மேற்கு, 17. செல்லத்துரை தனபாலசிங்கம் (9-11-89) நவாலி வடக்கு, 18. இராசதுரை இராசநாயகலிங்கம் (29-10-87) இணுவில் மேற்கு, 19. சின்னத்துரை அமுதலிங்கம் (29-10-87) இணுவில் மேற்கு.

21. கணேசன் சைவகலைஞன் (30. 05. 89) துன்னாலை தெற்கு. 22. பிச்சைமுத்து சிவஞானம் (17. 11. 87) உரும்பிராய் வடக்கு. 23. நவரெத்தினசிங்கம் கிருபாகரன் (06. 01. 88) நல்லூர் வடக்கு யாழ்ப்பாணம். 24. கந்தையா மகேந்திரராசா (தங்கச்சி) (21. 10. 87) கோப்பாய் தெற்கு. 25. செல்லையா சிவகுமார் (சந்தோஷம்) (24.01.88) அளவெட்டி வடக்கு. 26. பரமலிங்கம் அருந்தவநாதன் (29. 10.89) மட்டுவில் தெற்கு. 27. அருளையா செல்வராசா (03.11.87) ஊரெழு கிழக்கு. 28. நடேசலிங்கம் ஸ்ரீரஞ்சன் (03 - 11 - 87) ஊரெழு கிழக்கு. 29. இராசரத்தினம் சிவச்சந்திரன் (20.05.89) முதலாம் வட்டாரம் - முள்ளியவளை. 30. இராமசாமி கோவிந்தராஜ் (28. 02.89) தெல்லிப்பழை கிழக்கு. 31. மாணிக்கம் தவேந்திரராசா (16. 05. 89) புத்தூர் மேற்கு. 32. இளையதம்பி பார்த்திபன் (16. 05. 89) புத்தூர் மேற்கு. 33. திலகர் ரவிமோகன் (16 05. 89) புத்தூர் மேற்கு. 34 இரத்தினம் சசீந்திரன் (28. 12. 89) நாவற்குழி தெற்கு. 35. கந்தவனம் பத்மநாதன் (28. 12. 89) நாவற்குழி தெற்கு. 36. நடராசா கிருபாகரன் (23. 02. 88) ஊரெழு கிழக்கு. 37. துரைராஜசிங்கம் பிரேமானந்தன் (22. 10. 87) தெல்லிப்பழை. 38, குமாரசாமி செல்வராசா (13. 10. 87) புத்தூர் கிழக்கு. 39. கதிரவேலு விஜயநாதன் (15. 10. 87) நல்லூர். 40. கிருஷ்ணசாமி திலகரெத்தினம் (05. 11. 87)
41. சண்முகராசா வரதராசா (16-11-87) குருநகர், யாழ்ப்பாணம், 42. தம்பிராசா தவேந்திரன் (25-10-87) இணுவில், 43. சண்முகராசா வரதராசா (16-11-77) நல்லூர். 44. கிருஷ்ணசாமி திலகநாதன் (05-11-87) வண்ணார்பண்ணை, 45. சுதிரவேலு விஜயநாதன் (15-11-87) நல்லூர், 46. தில்லைநாதன் குலேந்திரன் (19-10-87) வண்ணார்பண்ணை, 47. திருமதி தங்கரெத்தினம் சங்கரலிங்கம், செல்வி சந்திரிகா சங்கரலிங்கம், செல்வி கனகாம்பிகை சங்கரலிங்கம் (கிரிஜா) செல்வி காயித்திரி சங்கரலிங்கம் (வீணை) (12 11 87) கோவில் வீதி, நல்லூர், 48. மரியாம்பிள்ளை ஒல்குவிச் அன்ரன் (22-10-87) பாஷையூர், 49. சின்னத்துரை டேவ்ட் துரைசிங்கம் (23-10-87) யாழ்ப்பாணம், 50. இராசதுரை ஸ்ரீகாந்தலிங்கம் (22-10-87) யாழ்ப்பாணம், 51. அந்தோனிப்பிள்ளை ஜோன்சன் (ராசா) (16-10-87) கொழும்புத்துறை, 52. நாகலிங்கம் சிவலிங்கம் (22-12-89) மாவிட்டபுரம் 53 அகஸ்ரின் யேசுதாஸன் (16-10-89) கொழும்புத்துறை, 54. பூவிலிங்கம் இராசேந்திரன் [02-01-90] 55. சின்னத்தம்பி சத்தியதாசன் [2-10-90] அராலி கிழக்கு, 56. சுப்பிரமணியம் சுதாகரன் (26-10-87) யாழ்ப்பாணம், 57. சண்முகநாதன் கமலகுமார் [13-10-87] நீர்வேலி, மத்தி. [5]

## மூடப்பட்டது

(மட்டக்களப்பு)

ஆறு வருட இடைவெளியின் பின்னர் கடந்த மாதம் திறக்கப்பட்ட மட்டக்களப்பு செயலக பொலிஸ் காவல் நிலையம் கடந்த வெள்ளிக்கிழமை பொலிசாருக்கும் புலிகளுக்குமிடையே நடந்த அசம்பாவிதத்தை அடுத்து மூடப்பட்டுள்ளது. (121)

## இப்படியும் நடக்கிறது

**யாழ்.** நகரில் இன்று மழை வருமா?.

மழை நீரில் நனையா விட்டாலும், செல்லப்பா குழுவினரின் தேனிசை மழையில் யாழ். மக்கள் இன்று நிச்சயம் 'நனைவார்'கள்!

ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர் விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனுடனும், திரு. மாத்தயாவுடனும் சென்னையில் வைத்து நேரடித்தொடர்பு கொண்டு மெய்சிலிர்த்த தேனிசை செல்லப்பா, பின்னர் பாடிய எழுச்சிப் பாடல்கள் - தமிழீழ இயக்கப் பாடல்கள் தமிழர் வாழும் இடங்களிலெல்லாம் கணீரென்று ஒலிக்கத் தொடங்கிற்று.

தமிழக வானொலி நிலையங்களிலும், இந்திய தொலைக்காட்சியிலும், பிலிப்பைன்ஸ் வெரித்தாஸிலும் இவரது வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகள் அன்று தாராளமாக ஒலி-ஒளிபரப்பப்பட்ட போதிலும், விடுதலைப் புலிகளின் போராட்டத்தை ஆதரித்த ஒரே காரணத்துக்காக இந்திய வானொலியும், இந்திய தொலைக்காட்சியும் தேனிசை செல்லப்பாவை முற்றாகப் புறக்கணித்து இருட்டடிப்பு செய்துள்ளன.

தமிழிசைத் தூதுவராக உலக வலம் வரும் தேனிசை செல்லப்பா பற்றிய ஒரு சிறு குறிப்பு: தேனிசை செல்லப்பா பிறந்த இடம்: தமிழ் நாட்டைச் சேர்ந்த திருநெல்வேலியாகும். 'தினத்தந்தி' நிறுவனர் சி. பா. ஆதித்தனார்தான் செல்லப்பாவுக்கு, 'தேனிசை செல்லப்பா' என்று பட்டம் வழங்கினார். இவர் இலங்கை வருவது இதுவே முதல் தடவை.

'ஊடுருவி'

## கோண்டாவில் ரயில்நிலையம் மின்ஒளி பெற்றது

[யாழ்ப்பாணம்!

சுன்னாகம் மின்சார சபை ஊழியர்களின் உதவியினால் கோண்டாவில் புகையிரத நிலையம் மின்னொளி பெற்றுள்ளது.

இந்திய அமைதிப் படையின் நடவடிக்கையின்போது சேதமடைந்த கோண்டாவில் ரயில் நிலையம் இரவு மெயில் வண்டி ஓடத்தொடங்கிய பின்னரும் மின் வெளிச்சமில்லாது பயணிகள் பெரிதும் கஷ்டப்பட்டனர். புகையிரத நிலைய ஊழியர்களும் கஷ்டப்பட்டனர். இதனை உணர்ந்த பொது மக்களில் சிலர் கோண்டாவில் கிழக்கு சனசமூக நிலையத்தினதும், இந்து இளைஞர் மன்றத்தினதும் செயலாளருடன் தொடர்பு கொண்டதன் பேரில் மேற்படி சங்கம் எடுத்துக்கொண்ட துரித நடவடிக்கையினால் சுன்னாகம் மின்சார சபை ஊழியர்களின் சேவை மனப்பான்மையுடன் நல்லூர் பிரதேச சபை அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் புகையிரத நிலையத்திற்குத் தற்காலிகமாக மின்னொளி வழங்கப்பட்டுள்ளது.

## "இந்திய வல்லரசின் தலையீட்டை விடுதலைப் புலிகள் தனித்து நின்று வெற்றி கண்டனர்" - செங்கதிர்

(பருத்தித்துறை)

"உலக பெண்ணினத்திற்கே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திய அன்னை பூபதியின் தியாக வேள்வி தமிழீழ விடுதலைப் போராட்டத்திலே வரலாற்றுக் காவியமாகி புதிய வரலாற்றுத் திருப்பத்தை ஏற்படுத்தியது. இந்திய வல்லாதிக்கம் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக ஏவிவிடப்பட்ட பயங்கர யுத்தத்திலே தமிழீழ விடுதலைப் புலிகள் வெற்றிகொள்வதற்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தலைவர் திரு. பிரபாகரனின் தன்னிகரற்ற செயற்பாடுகளும் இலட்சிய வேட்கைகொண்ட வேங்கைகளின் தியாக மரணங்களும், தமிழீழ மக்களின் தியாக வேள்விகளுமே காரணம் என்பதை இன்று அகில உலகமுமே ஏற்றுக்கொண்டு விட்டன.,'

மேற்கண்டவாறு பருத்தித்துறை மருதடி ஆலய அருகாமையில் நடைபெற்ற அன்னை பூபதி ஞாபகார்த்த பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகள் மத்தியகுழு உறுப்பினரும், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி உதவி அமைப்பாளருமான திரு. செங்கதிர் குறிப்பிட்டார். பெருந்திரளான மக்கள் கலந்துகொண்ட இக்கூட்டத்திற்குத் திரு. கதிரவேலு தலைமைதாங்கினார். தொடர்ந்து உரையாற்றிய திரு. செங்கதிர் குறிப்பிட்டதாவது:

"இந்தியவல்லரசானது தமிழீழ விடுதலைப் புலிகளின் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தலையிட்டு தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்கி தமிழ்ழமக்களை அழித்துவிடக் கங்கணம்கட்டி நின்றது. இந்திய வல்லாதிக்கத்தின் இக்கொடூரச் செயல்களை எதிர்க்க எந்த நாடோ முன்வரவில்லை. மாறாக உலக நாடுகள் விடுதலைப் போராட்டத்தில் இந்திய வல்லரசின் தலையீட்டை ஆதரித்தே நின்றன. தமிழீழவிடுதலைப் புலிகள் தனித்து நின்று இந்திய வல்லாதிக்கத் தலையீட்டைஎதிர்த்துப் போராடி இறுதியில் வெற்றி கண்டனர். இந்திய வல்லாதிக்கத்தின் கொடூர அடாவடித்தனங்களை எதிர்த்து தமிழீழ விடுதலைப்புலிகள் உலக அரங்கிலே தனிப்பெருஞ்சாதனையை நிலைநாட்டினர். இதனால் தமிழீழ விடுதலைப் புலிகளின் உண்மை நிலையை உலக நாடுகள் நன்கு உணர்ந்து கொண்டன.

"இந்திய வல்லாதிக்கத்தின் சவாலை வெற்றிகொண்டு தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றுத் திருப்புமுனையிலே எழுச்சியுடன் செயற்பட்டுவரும் நாம் எமது இலட்சியத்தில்வெற்றியடைய மிக முனைப்புடன் செயற்பட்டு வருகிறோம். இலட்சியத்தில் நாம் வெற்றியடைவோம். எமது விடுதலைப் போராட்டத்தில் இனஒடுக்குமுறை கூர்மையடைந்துவரும் வேளையில் பெண்கள் பெருந்தொகையாக ஆயுதமேந்தத்தொடங்கியதும் அன்னைபூபதியின் தனித்துவம் வாய்ந்த தியாகமும் விடுதலைப்போராட்டடவரலாற்றிலே முக்கிய இடத்தை வகிக்கின்றது',.

தமிழீழ விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி வடமராட்சிப் பொறுப்பாளர் திரு. குணம் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது.

"தமிழீழ விடுதலைப்போராட்டம் இன்று சர்வதேசரீதியிலே முன்னணியில் திகழ்கின்றது. தமிழீழ விடுதலைப்போராட்டத்திலே அன்னை பூபதியின் தூயதியாகம் தனிப்பெருஞ் சிறப்பு வாய்ந்த தமிழ் எழுச்சியைஏற்படுத்தியுள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகள் ஸ்ரீலங்கா அரசு, இந்திய வல்லாதிக்கம் ஆகியவற்றுடன் யுத்தங்கள் புரிந்து ஈற்றில் வெற்றிபெற்றமை தமிழீழவிடுதலைப்புலிகளுக்கு சர்வதேசரீதியில் புகழ் ஏற்பட்டுள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகளின் விடுதலைப்போராட்டத்தை அழிக்கமேற்கொண்ட நடவடிக்கைகளும் மழுங்கடிக்கபபட்டு தோல்வியைத்தழுவியுள்ளன. ஏனைய விடுதலை இயக்கங்களைப் போலலல்லாது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தனித்துவம் வாய்ந்த இயக்கமாக இயங்கிவருவதனாலேயேமக்கள் சக்தியின் முழுமையான கட்டுக்கோப்பை வலுப்படுத்தியுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளின் மனம்தளரா உறுதியும் மரணத்திற்குஅஞ்சாதவீரமும், சத்தியத்திலும் தர்மத்திலும் உள்ள நம்பிக்கையும் இலட்கியமும் வெற்றிக்கு வழி வகுக்கும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் வடமராட்சி மகளிர் முன்னணி பொறுப்பாளர் செல்வி லூசியா, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க வடமராட்சி பொதுமக்கள் தொடர்பாளர் திரு ஸ்ரெனின்லாஸ், திரு. பீ. ஆறுமுகம், திரு. எஸ். முத்துராஜா உட்பட இன்னும் பலர் உரையாற்றினர். (52)

## மாணவர் சேமிப்புத் திட்டம்

(ஆனைக்கோட்டை)

மானிப்பாய் வடக்கு சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச்சங்கம் தமது பகுதியிலுள்ள மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் ஆறும் ஆண்டு முதல் உயர் வகுப்புக்கள்வரையான மாணவர்களுக்குச் சேமிப்புத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கான ஏற்பாட்டினைச் செய்துள்ளது.

இதற்கான அனுமதியை மருதனமடம் கோட்டக்கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். கே. குலசேகரத்திடம் தாம் பெற்றுள்ளதாக இச்சங்கத் தலைவர் திரு. இ. வல்லிபுரம் தெரிவித்தார். இதனால் சிக்கனச் சேமிப்புப் பழக்கம் மாணவரிடையே பரவுமெனவும் திரு வல்லிபுரம் குறிப்பிட்டார். (139)

## முச்சக்கரவண்டி விநியோகம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சமூகசேவைகள் திணைக்களத்தினால் வலது குறைந்தவர்களுக்கு முச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுவருகின்றன.

களுவாஞ்சிக்குடி, வாழைச்சேனை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் நடைபெற்ற மேற்படி வைபவங்களில் வட-கிழக்கு மாகாண சபை புனர்வாழ்வு அமைச்சின் பதில் செயலாளர் திரு. கே. பத்மநாதன், மட்டக்களப்பு அரச அதிபர் ஆர். யோகநாதன், சமுகசேவைகள் உதவிப் பணிப்பாளர் இரா. தியாகராசா, மற்றும் அவ்வப் பிரிவு உதவி அரசாங்க அதிபர்கள் கலந்துகொண்டனர். (121)

## நோன்பு தொழுகை நேர அட்டவணை

| | |
|---|---|
| ஸிஹர் முடிவு | — 4. 25 |
| சுபஹ் | — 4- 40 |
| உதயம் | — 6-00 |
| லுஹர் | — 12-20 |
| அஸர் | — 3-22 |
| மஃரிப் | — 6-20 |
| இஷா | — 7-40 |

ஐக்கிய நாடுகள்

# புனருத்தாரண உதவிவள சேவைக்குழு நேற்று வல்வை விஜயம்

(வடமராட்சி)

ஐக்கிய நாடுகள் புனருத்தாரண உதவி வளச் சேவை உத்தியோகத்தர்கள், கடந்த கால அசம்பாவிதங்களின் போது சேதமுற்ற கட்டடங்களை நேரில் பார்வையிட, நேற்றுக் காலை யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தலைமையில் வல்வை வந்தனர்.

மேற்படி அமைப்புடன், வல்வை பிரசைகள் குழுத் தலைவர் திரு. எஸ் செல்வேந்திரா, வல்வை பட்டினசபைச் செயலாளர் திரு. எஸ். இராமச்சந்திரன் ஆகியோரும் சேர்ந்து பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டதுடன், தேவையான விபரங்களையும் அளித்தனர்.

இந்தக் குழுவின் விஜயத்தை அடுத்து முதற்கட்டமாக, வல்வை காய்கறிச் சந்தைத் திருத்த வேலைகளும், புதிய கட்டடங்களும் நிர்மாணிக்கப்படவுள்ளதாகவும், ஏனைய கட்டடங்கள் குறுகியகாலப் பகுதியில் நிர்மாணிக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது. (51)

# இளம் பெண் மர்ம மரணம்

(மட்டக்களப்பு)

இளம் பெண் ஒருவரின் சடலம், மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக உள்ள பாழடைந்த கடைக்குப் பின்புறமாகக் கண்டு எடுக்கப்பட்டுள்ளது.

எரிகாயங்களுடன் காணப்பட்ட இப்பெண் அணிந்திருந்த சுமார் எட்டுப் பவுண் பெறுமதியான நகைகள் அப்படியே இருந்தன.

அடையாளம் காணப்படாத இச்சடலம், விடுதலைப் புலிகளினால் மட்டக்களப்பு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மரண விசாரணை, மட்டக்களப்பு பதில் நீதவான் திரு. கே. தியாகராசாவினால் நடத்தப்பட்டது. (121)

## கடந்த மாதம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வகைப்பட்ட கடன்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வசதிகளும், வாய்ப்புக்களும் அண்மைக் காலங்களில் தோன்றியுள்ளதால் காப்புறுதி செய்வோரின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றது.

காப்புறுதிக் கொடுப்பனவுத் தொகைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதுவரை காலமும் ஒரு மாதம் 10 லட்சம் ரூபா வரை கொடுப்பனவு செய்ய அனுமதிக்கப்பட்டிருந்தது.

ஆனால் தலைமையகத்தினர், தற்போது 15 லட்சம் ரூபா வரை ஒரு மாதத்திற்குக் கொடுப்பனவு செய்யலாம் என அனுமதி வழங்கியுள்ளனரெனவும் திருமதி அரியநாயகம் கூறினார். (109)

## வடபகுதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

32 ஆசனங்களைக் கொண்ட இவற்றில் இரண்டு பெட்டிகள் 'யாழ். தேவி'யில் பொருத்தப்படும். ஏனையவை முற்றும் ஆயத்த நிலையில் வைத்திருக்கப்படும்.

இவற்றுக்கான கட்டணம் பற்றி இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என்றும் மேற்படி அதிகாரி தெரிவித்தார்.

## மினிபஸ் சேவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளப்படவேண்டும் என்று வட பிராந்திய மினிபஸ் சேவைச் சங்கத் தலைவர் திரு. பொன் மதிமுகராசா சகல மினிபஸ் நேரப் பொறுப்பாளர்களையும் கேட்டுள்ளார்.

தேனிசை செல்லப்பாவின் இசை நிகழ்ச்சி, இன்று யாழ். முற்றவெளி மைதானத்திலும் நாளை செவ்வாய்க்கிழமை புங்குடுதீவு மத்திய மகாவித்தியாலயத்திலும் நடைபெறவிருக்கிறது.

## யாழ். மத்திய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போதனு வைத்தியசாலை வீதி முன்பாக வந்து மணிக்கூட்டு வீதி வழியாக மைதானத்தைச் சென்றடையும்.

வடமராட்சிப் பகுதியிலிருந்து வரும் ஊர்திகள் நெல்லியடிச் சந்தியில் இருந்து ஆரம்பமாகி யாழ். போதனு வைத்தியசாலை வீதி முன்பாக சென்று மணிக்கூட்டு வீதி ஊடாக மைதானத்தைச் சென்றடையும்.

வலிகாமம் பகுதியில் இருந்துவரும் ஊர்திகள் தெல்லிப்பழைச் சந்தியிலிருந்து ஆரம்பமாகி யாழ் போதனுவைத்தியசாலை வீதி முன்பாக சென்று மணிக்கூட்டு வீதி ஊடாக மைதானத்தைச் சென்றடையும்.

தீவுப்பகுதியிலிருந்து ஆரம்பமாகி வரும் ஊர்திகள் யாழ். போதனு வைத்தியசாலை வீதி முன்பாகச் சென்று மணிக்கூட்டு வீதி ஊடாக மைதானத்தைச் சென்றடையும்.

இதில் பங்கு பற்றும் ஊர்திகளில் முதலாம், இரண்டாம், மூன்றும் இடங்கள் தெரிவு செய்யப்பட்டு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும். (153

மாகாணசபைகள் மூலம்

# கிராம மட்டங்களிலிருந்து நிர்வாக அமைப்பு மாற்றங்கள் செய்யப்படும்

## — அமைச்சர் பெஸ்ரஸ் பெரேரா

[கொழும்பு]

மாகாண சபைகளின் மூலம் கிராமிய மட்டங்களிலிருந்து நிர்வாக அமைப்பு மாற்றங்கள் செய்யப்படவுள்ளன. மக்களின் பொதுவாழ்வில், புதியதோர் போக்கினை ஏற்படுத்தும் வகையில் நிர்வாக மாற்றங்களைக் கொண்டுவர துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாகாண சபைகளின் முதலமைச்சர்கள், செயலாளர்கள் அரசாங்க அதிபர்கள் கலந்துகொண்ட விசேட மாநாட்டில் பொதுநிர்வாக மாகாணசபைகள் உள்நாட்டு அமைச்சர் திரு. பெஸ்ரஸ் பெரேரா இவ்வாறு தகவல் வெளியிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

''நிர்வாக மாற்றங்கள் சம்பந்தமான நடவடிக்கைகளை அமுல் செய்வதற்கென 273 பிராந்திய செயலக பிரிவுகளுக்கும் அதிகாரிகளும் ஏனைய ஊழியர்களும் விரைவில் நியமிக்கப்படவுள்ளனர்.''

மேல் மட்டத்திலிருந்து அடிமட்டத்தினரைக் கருத்தில் கொண்டு அபிவிருத்தி, செயற்றிட்டங்களை மாற்றி அமைக்கும் வண்ணம் அமைச்சர் சகல முதலமைச்சர்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ)

# தேசிய தொழிலாளர் ஆலோசனைச் சபை அமைக்கப்படும்

(கொழும்பு)

தேசிய தொழிலார் ஆலோசனைச் சபை ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளது.

தொழில், முன்பணி பயிற்சி தொடர்பான அமைச்சர் திரு. ஈ. எம். பிரேமசந்திரா இதற்கான தீர்மானத்தை எடுத்துள்ளார். இவ் ஆலோசனைச் சபைக்கு தொழில் அமைச்சரே தலைமை தாங்குவார்.

தொழிற் சங்கங்கள் வர்த்தக சம்மேளனங்களின் பிரதிநிதிகள் இச்சபையில் அங்கத்துவம் வகிப்பார்கள்.

தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட சட்டங்களைத் தயாரிக்கும்போதும், தொழிலாளர்கள் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணப்படும்போதும் இச்சபையின் ஆலோசனைகள் பெறப்படும்.

தேசிய தொழிலாளர் ஆலோசனைச் சபை அமைக்கப்படுவதையிட்டுத் தொழிற்சங்கங்கள் மத்தியில் பிரசாரம் செய்வதற்கு வெகுவிரைவில் கலந்தாலோசனைக் கூட்டம் நடாத்தப்படவுள்ளது.

தொழில் வாய்ப்பு அளிப்போர், தொழிலாளர் அனைவருக்கும் நலன் கிடைக்கும் வகையில் இத்தகைய தேசிய தொழிலாளர் ஆலோசனைச் சபைகள், தற்போது மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது. (அ)

# பரு. - கொழும்பு பஸ்சேவை இடைநிறுத்தப்பட்டது

(புலோலி)

வடபிராந்திய போக்குவரத்துச்சபை பருத்தித்துறை டிப்போவினால் நடத்தப்பட்டு வந்த பருத்தித்துறை - கொழும்பு பஸ் சேவை இடைநிறுத்தப்பட்டது.

யாழ். மாவட்டத்துக்கான ரயில் சேவை இல்லாத காலத்தில் வட பிராந்திய போக்குவரத்துச் சபையினால் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, காரைநகர் ஆகிய இடங்களிலிருந்து அந்தந்த டிப்போக்களினால் கொழும்புக்கான பகல் சேவை ஆரம்பிக்கப்பட்டது. இந்தியப்படை வடக்கிலிருந்து வெளியேறத் தொடங்கியதும் கொழும்புக்கு பகல் சேவையுடன் இரவு ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் யாழ். டிப்போவினால் நடத்தப்பட்டு வந்த யாழ். - கொழும்பு இரவுபஸ் சேவை முதலிலும், காரைநகர் கொழும்பு பகல் பஸ் சேவை அடுத்ததாகவும் நிறுத்தப்பட்டது.

இவ்விரு சேவைகளும் நிறுத்தப்பட்டும்கூட வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்திததுறை டிப்போவினால் தொடர்ந்தும் பருத்தித்துறை-கொழும்பு இரவு பஸ்சேவை நடத்தப்பட்டு வந்தது.

இச்சேவையையும் வடபிராந்திய போக்குவரத்துச்சபை பண பணிப்பின் பேரில் கடந்த சில தினங்களுக்கு முன் பருத்தித்துறை டிப்போ நிறுத்தியுள்ளது. (51-61)

## மலேசியா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தினம் மலேசியாவிலிருந்து 'ஈழநாடு'க்கு அனுப்பிவைத்த செய்திக்குறிப்பில் இப்படிக் கூறுகிறார்;

''மலேசியா, சிங்கப்பூரில் வாழும் சீனர்கள் மத்தியில் திரு. பிரபாகரன் ஓர் மாவீரனாகக் கணிக்கப்படுகின்றார் உலகின் நான்காவது மிகப் பெரிய இந்திய ராணுவத்தையும், இலங்கைப் படைகளையும் கதிகலங்கவைத்த வீரனென்று இங்குள்ள சீனர்கள் பரவலாகப் பேசுகின்றார்கள். சீனத் தினசரிகள், மற்றும் சீன மொழியில் வரும் வார வெளியீடுகளில் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும், அதன் தலைவர் திரு. பிரபாகரனுக்கும் மிக முக்கியத்துவம் கொடுத்து செய்திகள் வெளியிடப்படுகின்றன.''

## பெருந்தொகையான

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எவ்., ஈ. என் .டி. எல். எவ்., ரெலோ இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் எனவும், வடக்கு-கிழக்கில் அமைதியை நிலைநாட்டுவதற்கென, இவர்கள் இந்திய அமைதிப் படையினரால் பயிற்சி அளிக்கப்பட்டிருந்தாலும், ஆயுதங்கள் அனைத்தும் இலங்கை அரசினாலேயே வழங்கப்பட்டிருந்தன என்றும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

700, S 84 ரக ரைபிள்கள் இவர்களுக்கு இலங்கை அரசினால் வழங்கப்பட்டிருந்தன. இவ் ஆயுதங்களை மீட்டு எடுப்பதாயின் முதலில் இவர்களைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். இது சாத்தியமாகுமா? என்று பாதுகாப்பு உயர்அதிகாரிகள் சந்தேகம் தெரிவித்துள்ளனர். (அ

## தமிழீழ

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்றது.

திரு.ராஜன் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

எமது தேசிய இன விடுதலைப் போராட்டத்தை மழுங்கடிக்கக் கூடிய வெளிநாட்டு உதவிப் பணம் எமது மண்ணுக்கு தேவையில்லை. தேசிய இன விடுதலையை முதன்மைப்படுத்தக் கூடிய வகையில் அமைந்த பொருளாதார அபிவிருத்திகளே எமக்குத்தேவை.

அனைத்துப் பொது அமைப்புக்களும் புதிய சிந்தனைகளுடன் செயற்படவேண்டும் வறுமைக்கோட்டுக்குக்கீழுள்ள மக்களுக்கு அனைத்து உதவிகளும் சென்றடையவேண்டும். அனைத்து நிர்வாகங்களும் சீரமைக்கப்பட்டு ஒழுங்காக நடைபெறவேண்டும் என்றார். (153)

# நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் 'றிசேர்வ்' பொலிஸுக்கு ஆட்திரட்டல் நேற்று, மூன்றும் நாளாகவும் நடைபெற்றது.

நேற்று நடைபெற்ற 'றிசேர்வ்' பொலிஸ் நேர்முகப்பரீட்சைக்கு சுமார் 200 பேர் தோற்றியுள்ளனர். (153)

## இந்த வருடம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், பல்கலைக்கழக உபவேந்தர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஆகியோர் இந்த மாநாட்டில் பங்கு பற்றினார்கள்,

பல்கலைக் கழக அனுமதிக்கு தகைமை பெற்றிருந்தபோதிலும், பல்கலைக்கழகங்களில் இடவசதி இல்லாமையால் சேர்த்துக் கொள்ளப்படாத மேலும் பத்தாயிரம் மாணவர்களுக்கு உயர் கல்விக்கான வேறு வாய்ப்புகளை அளிக்க அரசாங்கம் ஒழுங்குகளைச் செய்து வருகிறது என்றும் அமைச்சர் ஹமீத் தெரிவித்தார்.

## இன்று

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சியல் பொறுப்பாளர் திரு. ஸ்ரான்லிடொமினிக் தலைமையில் இந்நிகழ்ச்சிநடைபெறும்.

இந்நிகழ்ச்சியை யாழ். மாவட்ட தளபதி திரு. பானு ஆரம்பித்து வைக்க புதுவை இரத்தினதுரை அறிமுகவுரை நிகழ்த்துவார்.

தமிழகத்திலிருந்து தேனிசை செல்லப்பா குழுவினரோடு வந்திருக்கும் திருமதி சொர்ணலதாவின் இசை நிகழ்ச்சியும் இன்று முற்றவெளி மைதானத்தில் இடம்பெறும்.

தேனிசை செல்லப்பாவின் இரண்டாவது இசை நிகழ்ச்சி நாளை 24-ம் திகதி புங்குடுதீவு மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவிருக்கிறது.

# இலவச உடை

[ஆனைக்கோட்டை]

அட்டகிரி சைவ வித்தியாசாலையில் வன்செயலால் பெரும் பாதிப்புக்குள்ளான மாணவர்களுக்கு நவாலி வை. எம். சி. ஏ. ஸ்தாபனத்தார் இலவசமக உடைகளை அண்மையில் அன்பளிப்புச் செய்தனர். இவர்களுக்கு இப்பாடசாலை அதிபர் திரு. இ. வல்லிபுரம் தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

வடமராட்சி கிழக்கில்

# 2 பாடசாலைகளில் முறைசாரா கல்விப் பயிற்சி

(புலோலி)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலுள்ள இருபாடசாலைகளில் முறைசாராக் கல்விப் பயிற்சி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இம் முறைசாராக்கல்விப் பயிற்சித் திட்டத்தின் கீழ் நாகர்கோவில் கொத்தணியின் கீழுள்ள குடத்தனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் தும்புத் தொழில் பயிற்சியும், உடுத்துறை கொத்தணியின் கீழுள்ள மருதங்கேணி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் வெளிஇணைப்பு இயந்திரம் திருத்தல் பயிற்சியும் அளிக்கப்படவுள்ளன.

இப்பயிற்சிகளுக்கு முன்னர் விண்ணப்பிக்காதோரும் அவ்வப் பாடசாலைஅதிபர்களுடன் தொடர்புகொண்டு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலையை விட்டு விலகியோர்களுக்காக இப்பயிற்சிநெறி ஆரம்பிக்கப்படுகிறது. (51)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு சித்திரை மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.